**வடமேல் மாகாண சபை – 2014**

**----------------------------------------**

வடமேல் மாகாண சபையின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23 (1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகின்றது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களது சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, நிதிசார் கூற்றுக்களில் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வட மேல் மாகாண சபையின் நிதிசார் நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் நடவடிக்கைகளும் காசுப்பாய்ச்சலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் கோட்பாடுகளுக்கு ஏற்ப உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 மாகாண சபை நிதியம்

2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிசார் கூற்றுக்கள் 2015 மார்ச் 23 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2.2 ஏனைய கணக்குகள்

**(அ) வருவாய்க் கணக்கு**

மாகாண நிதிசார் விதிகளுக்கமைய, வருவாய்க்கான நியதிச் சட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கணக்களி உத்தியோகத்தர்களால் தமக்குரிய வருவாய்க் கணக்குகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனினும், மீளாய்வாண்டிற்கான மாகாண சபையினது வருவாய்க் குறியேடுகளுக்குரிய 21 கணக்குகள் 2015 ஜுன் 4 ஆந் திகதியன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு உள்ளடங்கலான ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டின் பொருட்டு 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு கணக்குகளைச் சமர்ப்பிக்கும் முன்னேற்றம் கீழே காணப்படுகின்றது.

| | கணக்கின் பெயர் | 2014 ஆம் ஆண்டிற்கானது | | | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டவாறான சமர்பபிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளது மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளது எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளது எண்ணிக்கை | |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 26 | 26 | - | - |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 73 | 52 | 21 | 168 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (iii) | மாகாண சபை அங்கத்தவர்களுக்கான கடன்வசதி முற்பணக் கணக்குகள் | 01 | 01 | - | - |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 07 | 04 | 03 | - |
| (v) | நிதிய மற்றும் சட்டவாக்கக் கணக்குகள் | 14 | 13 | 01 | 15 |
| | மொத்தம் | 121 | 96 | 25 | 183 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வடமேல் மாகாண சபைக்குரிய தலைமைச் செயலாளர் அலுவலகம் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினது ரூபா 140,389,981 கூட்டுத்தொகையுடைய பொறுப்புகள் நிதிசார் கூற்றுக்களில் முற்றாகப் புலப்படுத்தப்படவில்லை. மேலும், 4 திணைக்களங்கள், 2 அமைச்சுக்கள் மற்றும் தலைமைச் செயலாளர் அலுவலகத்தின் ரூபா 5,136,682 கூட்டுத்தொகையுடைய பொறுப்புகள் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. அவ்வாறே, 5 திணைக்களங்களிற்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 70,331,958 கூட்டுத்தொகையுடைய நிதிக்கு மேற்பட பொறுப்புகள் உருவாகியிருந்தன.

### 2.2.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் 2 அமைச்சுக்களுக்கு மீளாய்வாண்டின் பொருட்டு தயாரிக்கப்பட்ட முற்பண ‘‘பீ’’ கணக்குகளது தனித்தனி மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பு மற்றும் திணைக்களத்தினது கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 4,349,276 கூட்டுத்தொகையுடைய வேறுபாடுகள் நிலவின.

(ஆ) மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், மாகாண பொறியியலாளர் திணைக்களம், கமத்தொழில் அமைச்சு, விலங்கின உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளுடன் தொடர்புடைய திறைசேரிப் புத்தகங்களுக்கும் திணைக்களப் புத்தகங்களுக்குமிடையே ரூபா 17,233,929 வேறுபாடும் சுகாதார, சுதேசிய வைத்தியம், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார மாகாண அமைச்சினதும் மாகாண சுகாதார திணைக்களத்தினதும் (2013 ஆம் ஆண்டு ) பொறியியல் திணைக்களத்தினதும் மாகாண கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தினது அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண ‘‘பீ’’ கணக்குகளில் திறைசேரிப் புத்தகங்களுக்கும் திணைக்களப் புத்தகங்களுக்குமிடையே ரூபா 22,250,744 வேறுபாடும் நிலவின.

(இ) நான்கு திணைக்களங்களது சீசீ 10 பதிவேட்டிற்கும் முற்பண ‘‘பீ’’ கணக்கிற்குமிடையே ரூபா 2,337,990 கூட்டுத்தொகையுடைய வித்தியாசம் நிலவியது.

(ஈ) மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாண அமைச்சின் முற்பண ‘‘பீ’’ கணக்கினது திணைக்களப் புத்தகங்களுக்கும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்குகளுக்குமிடையே ரூபா 3,240,324 வேறுபாடு நிலவியது.

(உ) இப்பாகமுவ வலயக் கல்வி அலுவலகத்தினது மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோர் மீதியாக கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் ரூபா 2,617,472 காணப்பட்டபோதும், கணக்கிணக்கக் கூற்றில் ரூபா 3,355,263 காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் மீதிகளுக்கிடையே ரூபா 737,791 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

ஓராண்டிற்கும் மேலாக, 8 பிரதேச செயலகங்கள் மற்றும் நிக்கரவரட்டிய ஆதார வைத்தியசாலை என்பவற்றிலிருந்து மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு மாகாண சபை பெற வேண்டியிருந்த வருவாய் நிலுவை ரூபா 6,761,330 ஆகும்.

(ஆ) கட்டுநிதிக் கணக்கு

மாகாண சபை அலுவலகம், 2 திணைக்களங்கள் மற்றும் ஒரு பிரதேச செயலகம் என்பவற்றிலிருந்து மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு மாகாணத் திறைசேரியில் தீர்த்து வைக்கப்படாதிருந்த கட்டு நிதி மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 10,713,642 ஆகும்.

(இ) பொது வைப்புக் கணக்கு

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தலைமைச் செயலாளர் அலுவலகம், சபைச் செயலாளர் அலுவலகம், 2 மாகாண அமைச்சுக்கள், 6 திணைக்களங்கள் மற்றும் 4 பிரதேச செயலகங்கள் என்பவற்றிலிருந்து 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட ரூபா 11,572,506 பெறுமதியான வைப்புகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

ஐந்து மாகாண அமைச்சுக்கள், 13 திணைக்களங்கள், 02 பிரதேச செயலகங்கள் தலைமைச் செயலாளர் அலுவலகம், சபைச் செயலாளர் என்பவற்றில் இடமாற்றம் பெற்ற, மரணமடைந்த, சேவை நீங்கிய, இடை நிறுத்தம் செய்யப்பட்ட, ஓய்வூ பெற்ற அல்லது பிற காரணங்களால் தீர்த்து வைக்கப்படாதிருந்த கடன் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 99,765,155 ஆகும்.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ)** மாவத்தகம மாவட்ட வைத்தியசாலையின் புல்வெட்டும் இயந்திரங்கள் இரண்டிற்கும் மின் உற்பத்திச் சாதனம் ஒன்றிற்கும் 1225 லீட்டர் எரிபொருளுக்கு ரூபா 160,848 செலவாகியபோதும், வேலைக்கால விபரம் அடங்கிய பதிவேடு மற்றும் பயன்படுத்திய எரிபொருள் அளவைக்குறிக்கும் விபரம் என்பன இல்லாமையால் எரிபொருள் செலவினத்தின் பிழையற்ற தன்மையை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

(ஆ) புத்தளம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வாகனம் ஒன்றினது நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தப் பொழிப்பும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் கடமைகளுக்குப் பயன்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 15,336 கீ.மீ பயணத்தூரம் தொடர்பாக போதியளவு பரிசோதனைகளைக் கணக்காய்வில் மேற்கொள்ள முடியவில்லை.

(இ) ஆணமடுவ பிரதேச செயலகம் ரூபா 572,265 பெறுமதியான 9 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) பொரமடல மஹா வித்தியாலயத்தில் 17 சந்தர்ப்பங்களில் ரூபா 112,743 பெறுமதியான கொடுப்பனவுகளை உறுதி செய்வதற்குத் தேவையான விலைப்பட்டியல் மற்றும் ஏனைய பதிவேடுகள் எதுவுமின்றி பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கணக்கிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**2.2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வு மாதிரிச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) அதிகாரச் சட்டங்கள்** | |
| 2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ மனைப்பிரிவு பதிவு அதிகாரச் சட்டத்தின் 3.5 ஆம் பிரிவு | மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சேகரித்த தொகையில் 50 சதவீதமாகிய ரூபா 5,600,000 மாகாண சபைக்கு அனுப்பப்பட வேண்டும். எனினும், அவ்வாறு செய்யாது அதில் ரூபா 3,610,685 மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரது விசேட கணக்கொன்றில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |

(ஆ) வடமேல் மாகாண நிதிசார் விதிக்கோவை

---------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) | மா.நி.வி 29.4 (ஓ) | குறைநிரப்பு நிதியேற்பாட்டில் எஞ்சியவற்றை மாற்றஞ் செய்யலாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், 2 சந்தர்ப்பங்களில் மாகாண ஆயுர்வேதத் திணைக்களம் குறைநிரப்பு நிதியேற்பாட்டில் ரூபா 3,516,000 ஐ மாற்றஞ் செய்திருந்தது. |
| (ii) | மா.நி.வி 76.2.9 | வடமேல் மாகாண சபையால் நியமிக்கப்பட்ட மேற்பார்வை அங்கத்தவர்கள் இருவர் மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கு எதுவித அறிக்கைகளையும் சமர்ப்பிக்காதபோதும், சமூக நலனோம்பல் அமைச்சினால் மேற்பார்வைப் படியாக ரூபா 240,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii) | மா.நி.வி 164(ஆ) | மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 28,005,174 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச் சான்றுகளை சான்றுறுதிப்படுத்தி வரையப்பட்ட 38 காசோலைகள் 2015 மார்ச் 6 ஆந் திகதியன்றும் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் வரை தக்கவைக்கப்பட்டிருந்தன. |
| (iv) | மா.நி.வி 261 | மாகாண கல்வித் திணைக்கள அலுவலகம் 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 8,062,884 முற்பணத்தை பல்வேறு நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்ததுடன் முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட |

விலைப்பட்டியல்களது பெறுமதி ரூபா 6,014,180 ஆகவுமிருந்தது. அதற்கமைய, தேவைக்கதிகமாக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணம் ரூபா 2,040,704 ஆகவிருந்தது. அது மொத்த முற்பணத்தில் 25 சதவீதம் ஆக இருந்தது. அவ்வாறே 30 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,650,500 முற்பணத்தில் எஞ்சியிருந்த தொகை வழங்கப்பட்ட முற்பணத்துடன் ஒப்பிடுகையில் 24 முதல் 84 சதவீதமாக இருந்தது.

(v) மா.நி.வி 261.2.2

உத்தியோகத்தர் ஒருவர் முன்னர் பெற்றிருந்த இடைக்கால முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு முன்னர் உப கட்டுநிதி வழங்கப்படாலாகாது எனக் குறிப்பிடப்பட்டபோதும், மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்தின் 16 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 4,765,325 முற்பணமும் நிக்கவரட்டிய வட்டார அலுவலக உத்தியோகத்தர் 8 பேருக்கு ரூபா 344,250 முற்பணமும் அவர்களது முன்னைய முற்பணம் தீர்த்து வைக்கப்படாதிருக்கையில் வழங்கப்பட்டிருந்தது.

(vi) மா.நி.வி 476

மீளாய்வாண்டிற்கான பொருட் கணிப்பு நடவடிக்கைகள் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெற வேண்டியபோதும், 6 திணைக்களங்கள், 1 அமைச்சு மற்றும் ஒரு பிரதேச செயலகத்தில் குறிப்பிடப்பட்ட தினத்தில் உள்ளவாறு பொருட் கணிப்பு நடவடிக்கைகள் முடிவடையாதிருந்தன.

**(இ) சுற்றறிக்கைகள்**

---------------------------

| | | |
|---|---|---|
| (i) | சனாதிபதி செயலாளரின் 2010 ஒக்தோபர் 7 ஆந் திகதிய சீஏ/09/என்எஸ்சீசீ/பொது இலக்க மற்றும் 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய பீசீஎம்டீ/1/4/23/1/14 ஆம் இலக்க கடிதங்கள் | சபைச் செயலாளரது அலுவலகத்தின் உயர் பதவிகளுக்கான சம்பள அளவுத்திட்டம் அரசாங்க சேவையின் சம பதவிகளுக்கு உரித்தான சம்பள அளவுத் திட்டத்திலும் கூடியதாக இருந்தது. இதன் பொருட்டு தேசிய சம்பள மற்றும் ஊழியர் நியமன ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்படவில்லை. மாகாண சபை நியமனஞ் செய்த ஆலோசனைக் குழுவினது சிபார்சுக்கமைய இச் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) | 2013 ஜனவரி 1 ஆந் திகதிய SFA/01/2012 ஆம் இலக்க சுகாதார அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கை | அடிப்படைச் சம்பளத்திற்கு அதிகமாக மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் விசேட படிகளும் வழங்கப்படுகையில் குறித்த நிதியேற்பாட்டிற்கு உட்படும் விதத்தில் மாத்திரமே கொடுப்பனவுகளை மேற்கொள்ளலாம். எனினும், புத்தளம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நிதியேற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 2,002,030 மேலதிக நேர வேலைக் கொடுப்பனவும் விசேட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | 2001 மார்ச் 28 ஆந் திகதிய 1/2001 ஆம் இலக்க உள்ளுராட்சி அமைச்சினது செயலாளரின் (நேரடி அமைச்சு) சுற்றறிக்கை | மாகாண சபை அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படக்கூடிய அதிகூடிய கடன் ரூபா 250,000 ஆகும். எனினும், 2009 மார்ச் 2 ஆந் திகதிய 5 ஆம் மாகாண சபையினது 5/1/அமா/2009/2 தீர்மானத்திற்கமைய இதனை ரூபா 500,000 வரை வடமேல் மாகாண சபைச் செயலாளர் அலுவலகம் அதிகரித்திருந்தது. |

| | | |
|---|---|---|
| (iv) | 2014 ஜனவரி 6 ஆந் திகதிய எப்சீ/3/2/2014 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுச் சுற்றறிக்கை | மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகள் செலவின விடயத்தின் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்தி சமூக நலனோம்பல் அமைச்சு ரூபா 1,439,710 பெறுமதியான அலுவலக உபகரணங்களையும் நூலகப் புத்தகங்களையும் கொள்வனவு செய்திருந்தது. |
| (v) | வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளரின் 2013 டிசெம்பர் 13 ஆந் திகதிய வ/அத்ய/பாவி/10/05/01 ஆம் இலக்க கடிதம் | வட்டாரக்கல்வி அலுவலகத்தின் பொருட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள மாதாந்த எரிபொருளின் அளவு 400 லீட்டர் என அறிவிக்கப்பட்டுள்ள போதும் 2014 ஆம் ஆண்டில் நிக்வரட்டிய, இப்பாகமுவ, கிரி உல்ல ஆகிய வட்டாரக் கல்வி அலுவலகங்கள் 1510 லீட்டர் எரிபொருளைக் கூடுதலாகப் பெற்றிருந்தன. |

### 2.2.8 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வாகனக் குழாமில் உள்ள ஒரு வாகனம் முன்னாள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் தற்போதைய பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பயனங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், 2012 ஒக்டோபர் முதல் 2014 டிசெம்பர் வரை அவ்வாகனத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட 140 லீட்டர் வரம்பிற்கதிகமாக ரூபா 1,117,590 பெறுமதியான 9,352 லீட்டர் எரிபொருள் மேலதிகமாக வழங்கப்பட்டுமிருந்தது.

(ஆ) நிதி, கொள்கை திட்டமிடல் அமைச்சின் செயலாளரது 2014 ஜனவரி 01 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க தேசிய வரவுச் செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் வழங்கப்படுவதற்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு பயணப் படியோ அல்லது நிறுவனத்தால் வாகனம் ஒன்று ஒதுக்கப்படுதல் ஆகிய இரண்டில் ஒன்றை மாத்திரமே வழங்கலாமெனினும், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் போன்றே தற்போதைய பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளரும் பதவிக்கென அங்கீகரிக்கப்பட்ட வரம்பிற்கு அதிகமாக திணைக்களத்தால் எரிபொருள் வழங்கப்பட்டிருக்கையில் வாகனக் குழாத்தின் ஒரு வாகனத்தையும் பயன்படுத்தியிருந்தனர். இதற்கமைய, 2011 முதல் 2014 வரை ரூபா 891,892 கூட்டுத்தொகையுடைய மாதாந்த எரிபொருள் படியையும் பெற்றிருந்தனர்.

(இ) மேற்பார்வை அங்கத்தவர்களாகப் பணியாற்றுவதன் பொருட்டு எரிபொருள் படி, வழங்குவதற்கு எந்தவொரு சுற்றறிக்கையிலும் ஏற்பாடுகள் இல்லாதபோதும், 2014 ஜனவரி முதல் டிசெம்பர் வரை வடமேல் மாகாண சபை அங்கத்தவர்கள் இருவருக்கு வடமேல் மாகாண சுகாதார, சுதேசிய வைத்தியம், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் மேற்பார்வை அங்கத்தவர்களாகப் பணியாற்றியமைக்காக மாதாந்தம் ரூபா 10,000 வீதப்படி ரூபா 240,000 எரிபொருள் படியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3. வருவாய் முகாமைத்துவம்

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மாகாண சபையின் ஒவ்வொரு வருவாய் குறியீட்டின் கீழ் மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளபடியான வருவாயுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே காணப்படுகின்றது.

| | | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|---|
| வருவாய் குறியீட்டு இலக்கம் | வருவாய் விபரம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் |
| | | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| 10.02,10.03 | உற்பத்தி மற்றும் செலவினம் மீதான வரி | 5,153.00 | 5,036.40 | 4,941.00 | 4,007.15 |
| 20.02 | குத்தகை வாடகை, இலாபம், பங்கிலாபம் | 252.00 | 184.67 | 203.00 | 233.29 |
| 20.03 | விற்பனையும் கட்டணமும் | 623.00 | 486.78 | 447.00 | 461.11 |
| 20.06 | மூலதனப்பொருள் விற்பனை | 27.00 | 11.77 | 2.00 | 0.24 |
| | மொத்தம் | 6,055.00 | 5,719.62 | 5,593.00 | 4,701.79 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது 3 பிரதேச செயலகங்களில் ரூபா 469,586 வருவாய் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு உள்ளூராட்சி நிறுவனங்கள் பெற்றிருந்த நீதிமன்றத் தண்டப் பணமாகிய ரூபா 26,695,655 மற்றும் முத்திரைக் கட்டணமாகிய ரூபா 113,632,141 என்பன குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படாதிருந்தன. எவ்வாறாயினும், வடமேல் மாகாண தலைமைச் செயலாளரது 2015 ஆகஸ்ட் 25 ஆந் திகதிய பதிலின் பிரகாரம் இத்தொகையானது விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு புரள்வுவரி மீதியாகிய ரூபா 205,635,373, சொத்துக்களை ஒப்படைத்தல் மீதான முத்திரைக் கட்டணமாகிய ரூபா 96,907,915 தொகையும் 46 பிரதேச செயலகங்களிலிருந்து காணி ஆணையாளர் அறவிட வேண்டிய வரி மீதியாகிய ரூபா 35,003,490 என வருவாய் நிலுவையாக இருந்தன.

## 4. நிதிசார் மீளாய்வு

--------------------------------

### 4.1 நிதிசார் விளைவுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 44,909,677 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 275,981,295 ஆகும்.

### 4.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

---------------------------------------------------------------

**வருவாயும் செலவினமும்**

------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருவாய் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பு கீழே காணப்படுகின்றது.

|  | 2014 |  |  | 2013 |  |  |
|---|---|---|---|---|---|---|
| **வருவாய்** | **பாதிடப்பட்ட** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** | **பாதிடப்பட்ட** | **உள்ளவாறானது** | **வேறுபாடு** |
|  | **ரூபா, மில்லியன்** | **ரூபா, மில்லியன்** | **ரூபா, மில்லியன்** | **ரூபா, மில்லியன்** | **ரூபா, மில்லியன்** | **ரூபா, மில்லியன்** |
| வரி வருவாய் | 5,153.00 | 5,036.39 | 116.61 | 4,941.00 | 4007.15 | 933.85 |
| வரி அல்லாத வருவாய் | 902.00 | 683.22 | 218.78 | 652.00 | 694.64 | (42.64) |
| அரசாங்க மானியம் | 20,672.10 | 19,393.21 | 1,278.80 | 17,568.44 | 16,332.24 | 1,236.20 |
| மொத்தம் | 26,727.10 | 25,112.82 | 1,614.20 | 23,161.44 | 21,034.03 | 2,127.41 |
| **மீண்டுவருஞ் செலவினம்** |  |  |  |  |  |  |
| ஆளுக்குரிய வேதனம் | 17,263.00 | 16,999.31 | 263.69 | 16,050.31 | 15,369.68 | 680.63 |
| ஏனைய செலவினம் | 4,856.50 | 4,199.26 | 657.24 | 4,650.90 | 3,800.17 | 850.73 |
| உப மொத்தம் | 22,119.50 | 21,198.57 | 920.93 | 20,701.21 | 19,169.85 | 1,531.36 |
| மூலதனச் செலவினம் | 4,067.70 | 3,869.33 | 198.37 | 2,460.23 | 1,588.20 | 872.03 |
| மொத்தம் | 26,187.20 | 25,067.90 | 1,119.30 | 23,161.44 | 20,758.05 | 2,403.39 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் மொத்தச் செலவினத்தில் நூற்றுக்கு 85 சதவீதம் மீண்டுவருஞ் செலவினமாகும். நூற்றுக்கு 15 சதவீதம் மூலதனச் செலவினமாகும்.

(ஆ) மீளாய்வாண்டின் மொத்த வருவாயில் நூற்றுக்கு 20 சதவீதம் வரி வருவாய் ஆகும். நூற்றுக்கு 3 சதவீதம் வரி அல்லாத வருவாயாகும். நூற்றுக்கு 77 சதவீதம் அரசாங்க மானியமாகும்.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 805,722,284, முன்னைய ஆண்டில் ரூபா 748,452,671 என திறைசேரி உண்டியலில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) எட்டு மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் என்பவற்றின் 13 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 471,338,000 நிதியானது முற்றாக எஞ்சியிருந்தது. 14 தலைப்புக்களில் 36 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 78,140,274 நிதியில் 50 முதல் 99 வரையிலானவை சேமிப்பிற்குள்ளாகின.

## 5. அதிகார சபைக்/ நிதியக் கணக்கு மற்றும் வணிக முற்பணக் கணக்கு

### 5.1 அதிகார சபைக்/ நிதியக் கணக்கு

#### 5.1.1 வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகாரசபை

(அ) நிதிசார் கூற்றுக்கள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

(i) கணக்கீட்டுக் கொள்கை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு முற்றாகத் தேய்மானத்திற்குள்ளான சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டவாறிருந்த போதும், அவற்றை மீளப் பெறுமதியிட்டுத் தேவையான சீராக்கல்களைக் கணக்கில் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(b) சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் போன்றன தொடர்பாக இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 7 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**(ii) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கான மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அடுத்து வரும் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்படவுள்ள கடன் தவணைத் தொகை நடைமுறைப் பொறுப்புகளின் கீழும் எஞ்சிய மீதி நடைமுறையல்லாத பொறுப்புகளின் கீழும் காட்டப்பட வேண்டுமாயினும் கொடுப்பனவு செய்ய வேண்டிய வங்கிக் கடன் மீதியான ரூபா 18,268,487 அவ்வாறு வேறுபடுத்தப்படாது நெடுங்காலக் கடனின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(b) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு பணிக்கொடைக்கான நிதியேற்பாடு ரூபா 19,388,188 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(c) நிலையான சொத்துக்களது கைதவிர்ப்பினால் ஏற்படும் இலாபத்தையோ அல்லது நட்டத்தையோ கணிப்பிட்டு அதனை ஆண்டிற்கான நிகர இலாபத்தில் சீராக்கல் செய்யவில்லை. இயந்திரங்களது கைதவிர்ப்பால் பெறப்பட்ட ரூபா 691,167 பெறுவனவானது காசுப் பாய்ச்சலாக இனங்காணப்படவில்லை.

**(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாடகைக் கட்டணம் மற்றும் வாகனப் பழுதுபார்த்தல் கடன்பட்டோராக இருந்த ரூபா 41,946,329 ஆகும். இதில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோராக இருக்கும் கடன் மீதிகளது பெறுமதி ரூபா 17,471,469 ஆகும்.

(ii) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான கடன்கொடுத்தோர் மீதி ரூபா 6,495,624 ஆகும். அதில் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் ரூபா 355,828 ஆகும்.

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | வரித்தொகையான ரூபா 13,279,214 அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பல ஆண்டுகளாகக் குறித்தவாறு அனுப்பிவைக்கப்படாதிருந்தது. |
| (ii) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் மற்றும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டம் | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிக்கு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கழிவுத் தொகை மீதியான ரூபா 16,158,908 குறித்தவாறு அனுப்பி வைக்கப்படாதிருந்தது. |

(உ) செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

(i) முகாமைத்துவ வினைத்திறமையின்மை

------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) விற்பனை செய்யப்படாத அல்லாது பயன்படுத்தப்படாததன் காரணமாக 13 வாகனங்கள் 5 ஆண்டுகளுக்கு மேலாக அழிவுற்றவாறு இருப்பது கணக்காய்வு மாதிரிச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

(b) 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாகிய பெக்கோ லோடர், மோட்டார் கிறேடர் மற்றும் எக்ஸ்கவேட்டர் இயந்திரச் செலுத்துநர் பயிற்சிப் பாடசாலைக்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 6,700,000 செலவழித்து பெக்கோ லோடர் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டபோதும், மீளாய்வாண்டில் எந்தவொரு மாணாக்கரும் பயிற்சிப் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்தனர்.

(c) நிதிக் கட்டுப்பாடு சிறப்பாக அமையாததால் மீளாய்வாண்டில் வங்கி மேலதிகப் பற்று வட்டியாக ரூபா 571,141 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(d) பழுதடைந்தமையால் அநேக ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட முடியாது வர்த்தகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாதிருந்த ரூபா 19,661,021 பெறுமதியான 15 இயந்திர விடயங்கள் மீளாய்வாண்டினது சொத்துக்களாக கணக்கில் காட்டப்பட்டிருந்தன. அவற்றை அப்புறப்படுத்தவோ அல்லது வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ இல்லை.

(ஊ) செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---

(i) நிறுவனம் தொடர்ந்து இயங்குவதன் நிச்சயமற்ற தன்மை

---

நிறுவனத்தின் கடந்த சில ஆண்டுகளது நிதிசார் கூற்றுக்களைப் பகுப்பாய்வு செய்யும்போது அவதானிக்கப்பட்ட பின்வரும் விடயங்களுக்கமைய நிறுவனம் தொடர்ந்து இயங்குவதில் நிச்சயமற்ற தன்மை நிலவுவது அவதானிக்கப்பட்டது.

(a) கிட்டிய 5 ஆண்டுகளில் ரூபா 53,996,739 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(b) நிரந்தர பதவியணியினர் 93 பேரினது சேவைக்காலத்தின் பிரகாரம் மீளாய்வாண்டு முடிவில் பணிக்கொடையாக ரூபா 18,480,408 வருடாந்தம் இலாபத்திலிருந்து பிரித்தொதுக்கப்பட்டு முதலீடு செய்யப்படாமையால் ஓய்வுபெறும் ஊழியர்களுக்குரிய பணிக்கொடை உரிய தினத்தில் கொடுப்பனவு செய்யப்படுவதற்கான நிதி இல்லாத நிலைமை உருவாகியிருந்தது.

(c) பணமில்லாமையால் ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய ரூபா 6,158,908 கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது.

(d) நீதிமன்றக் கட்டளை ஒன்றின் பிரகாரம் பல ஆண்டுகளாகக் கொடுப்பனவு செய்யப்படாதிருக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத் தண்டப் பணமாகிய ரூபா 3,466,174 பணமில்லாமையால் கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது.

(e) பணமின்மையால் அநேக ஆண்டுகளாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியாகிய ரூபா 13,279,214 கொடுப்பனவு செய்யப்படாதிருந்தது.

(f) செயற்பாட்டு நடவடிக்கைகள் வங்கி மேலதிகப்பற்றில் தங்கி இருப்பதால் பெருமளவு மேலதிகப் பற்று வட்டி செலுத்தவேண்டி ஏற்பட்டு அதன் காரணமாக மீளாய்வாண்டளவில் வங்கி மேலதிகப் பற்று ரூபா 1,498,873 ஆகவும் கொடுப்பனவு செய்த வங்பி மேலதிகப்பற்று வட்டி ரூபா 571,141 ஆகவுமிருந்தது.

(g) நிகர சொத்துக்கள் ரூபா 41,744,589 ஆகும். அது ரூபா 61,998,642 பொறுப்புகளைத் தீர்த்து வைக்கப் போதுமானதாக இல்லை.

(h) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம், 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதி ரூபா 17,471,469 ஆகும். இக்கடனானது அறவிடமுடியாக் கடனாக உருவாகும் நிலை அவதானிக்கப்பட்டது.

(ii) நேரடிப் பரிசோதனையின்போது இயந்திர சாதன அதிகாரசபை வளாகத்தில் 4 மோட்டார் வாகனங்கள் இல்லாதிருந்ததுடன் வெளிச்செல்லும் சேவைகளுக்கான பதிவேட்டின் பிரகாரம் இவ்வாகனங்கள் வெளிச்சேவை நிலையங்களில் பயன்படுத்தப்படவுமில்லை.

(எ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அநேக ஆண்டுகளாகப் போதியளவு சேவைகளைப் பெறுவதற்குத் திட்டமிடாததால் ரூபா 16,843,685 கிரயத்திலான 8 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ii) அநேக ஆண்டுகளாக ரூபா 25,376,967 கிரயமுடைய 11 வாகனங்கள் சிறு சேவைகள் எதுவுமின்றியும் சேவைக்குத் தேவையான மேலதிக துணைப்பாகங்கள் பெறப்படாமலும் பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வு மாதிரிச் செவ்வையின்போது புலனாகியது.

### 5.1.2 மனிதவள அபிவிருத்தி அதிகாரசபை

(அ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

இலங்கை வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ள 33 உத்தியோகத்தர்களது ஊழியர் பிணைப் பணமாகிய ரூபா 479,591 நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புகள் என்பவற்றின் கீழ் காட்டப்படாதிருந்தன.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்தவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 1653 | வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தரால் ஒவ்வொரு நாளைய பயண ஆரம்பம் மற்றும் முடிவின்போது மைலோமீட்டர் பரிசீலிக்கப்பட்டு சாரதியால் நாளாந்த ஓட்ட அட்டவணையில் எண்ணிக்கை செய்யப்படும் மைல்களின் பதிவு கைச்சாத்திடப்பட வேண்டும். எனினும், ஒரு வாகனம் பயணஞ் செய்த 8650 கிலோமீட்டர் தொடர்பாக அவ்வாறு செய்யப்படவில்லை. |
| (ii) மாகாண நிதிசார் விதி 261.2.2 | முற்பணமாக 4 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 187,000 நிதிசார் விதிகளுக்கமையத் தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (iii) | வடமேல் மாகாண தலைமைச் செயலாளரது 2011 டிசெம்பர் 15 ஆந் திகதிய வ/பிரலே/5/4/8 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பிணைப் பணம் செலுத்த வேண்டிய 6 அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 124,000 பிணைப்பணத்தைப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | வடமேல் மாகாண தலைமைச் செயலாளரது 2014 ஜனவரி 28 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் 1.2.1 ஆம் பந்தி | நிறைவேற்று பணிப்பாளருக்கு 2014 ஒக்டோபர் முதல் 2015 சனவரி வரை ரூபா 61,645 பெறுமதியாள 545 லீட்டர் (டீசல்) எரிபொருள் அளவிற்கதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (v) | பொது நிர்வாக அமைச்சின் செயலாளரது 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | பொது முகாமையாளருக்கு 2014 ஒக்டோபர் முதல் 2015 பெப்ரவரி வரை ரூபா 78,913 க்கான 710 லீட்டர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

(i) முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) 2009 - 2014 காலப் பகுதியின்போது 15 நபர்களுக்கும் 16 சங்கங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த ரூபா 4,150,000 கடனில் எவற்றையேனும் அறவிட முடியாதிருந்தது.

(b) செயற்திட்டக் கடன் அறவிடப்படாமைக்கெதிராக நடவடிக்கை எடுத்தல்

ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் தொடர்ச்சியாக கடனைச் செலுத்தத் தவறிய 03 செயற்திட்டங்கள் தொடர்பாக 26 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,094,982 கடன் அறவிடப்படாமை சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டின்போது இணக்கச் சபையுடன் தொடர்பு மேற்கொள்ளப்பட்டது. 4 செயற்திட்டங்களுக்குரிய 41

நபர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்த ரூபா 1,349,279 கடன் மீதியை அறவிடுவதற்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) இனங்காணப்பட்ட இழப்புகள்

---------------------------------------------------

பாரம்பரிய விதை நெல்லின் மூலம் அரிசி உற்பத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது அதிகாரசபைக்கு ரூபா 142,400 இழப்பு ஏற்பட்டிருந்தது.

(iii) பயனற்ற செலவினம்

---------------------------------------------

மனிதவள அபிவிருத்தி அதிகாரசபையின் கடன் திட்டத்திற்கென கணனி மென் அணியைத் தயாரிப்பதற்குச் செலவிடப்பட்ட ரூபா 891,251 பயனற்ற செலவினமாகியிருந்தது.

**5.1.3 வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகாரசபை**

------------------------------------------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------------

முணைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 2 முதல் 14 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டவாறிருந்த பெற வேண்டிய மீதியாகிய 1,073,827 குறித்த நபர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) மாகாண நிதிசார் விதி 261.2.2 | இடைக்கால முற்பணம் வழங்கப்படும்போது ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 வரம்பிற்கு அதிகமாக முற்பணம் வழங்கப்படுமாயின் தலைமைச் செயலாளரின் முன்கூட்டிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எனினும், 9 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,985,000 முற்பணம் சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. |
| (ii) 2004 ஜனவரி 16 ஆந் திகதிய 1324 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி (திருத்திய) யின் 2.1 ஆம் பந்தி | திறந்த, குறைவான கேள்வி நடைமுறைகள் மூலமாக அனுமதிப்பத்திரதாரர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமாயினும், 2013 ஜனவரி 1 முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை பெறப்பட்ட 106 புதிய வீதி அனுமதிப்பத்திரங்கள் தொடர்பாக அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை. |

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

(i) செயற்பாட்டு வினைத்திறமையின்மை

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) 2001, 2002, 2009 ஆம் ஆண்டுகளில் 4 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 115,500 முற்பணமானது கணக்காய்வுத் தினமளவிலும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(டி) சேவை உடன்படிக்கையொன்றின்றி மீளாய்வாண்டின் போது ஒரு வழக்கறிஞருக்கு ரூபா 409,000 சட்டச் செலவினமாக வழங்கப்பட்டிருந்தது.

(ii) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------

நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கோ அல்லது நோக்கங்களுக்கோ தொடர்பற்றவாறு ரூபா 143,270 செலவழிக்கப்பட்டு சனாதிபதி பதவி ஏற்புக்கான புதினப்பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

(iii) இனங்காணப்பட்ட நட்டங்கள்

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) 2013 ஜனவரி தொடக்கம் 2014 ஜுலை வரை வழங்கப்பட்ட 38 புதிய அனுமதிப்பதிரங்கள் தொடர்பாக கேள்வி கோரல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்படாமையால் அதிகாரசபைக்கு ரூபா 437,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(b) 2013 ஜனவரி முதல் 2014 ஆகஸ்ட் 31 வரை வழங்கப்பட்ட 102 புதிய அனுமதிப்பதிரங்கள் தொடர்பாகக் குறித்த கட்டணம் அறவிடப்படாமையால் ரூபா 32,359,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 5.1.4 மாகாண சுற்றாடல் அதிகாரசபை

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) மீளாய்வாண்டிற்கான கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் ரூபா 270,064 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ii) முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகிய ரூபா 4,419,777 பெறுமதியான 4 வகைச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டவாறிருந்தபோதும், அவற்றை மீள மதிப்பீடு செய்து கணக்கிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

வடமேல் மாகாண தலைமைச் செயலாளரது 2011 டிசெம்பர் 15 ஆந்த திகதிய வ/பிர.லே/5/4/1/8 ஆம் இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் பிணைப்பணம் செலுத்தவேண்டிய 10 உத்தியோகத்தர்கள் ரூபா 111,000 செலுத்த வேண்டியிருந்தபோதும் ரூபா 40,000 மாத்திரமே செலுத்தியிருந்தனர்.

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------------

(i) செயலாற்றல்

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) 2010 டிசெம்பர் 21 ஆந் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய கைத்தொழில் துறைகளைப் பரிசீலனையின் மூலம் இணங்காணும் நடவடிக்கைகளை அதிகாரசபை அமுல்படுத்தாது கைத்தொழிலாளிகளின் வேண்டுகோளின் பேரில் மாத்திரமே பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(b) அனுமதிப்பதிரங்கள் வழங்கப்படுவதை முறையாகப் பதிவுசெய்து அந்த அனுமதிப்பதிரங்கள் வருடாந்தம் புதுப்பிக்கப்படுகின்றனவா என்பதைப் பரிசீலனை செய்யக் கூடியவிதத்தில் பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. புதுப்பித்தல் தொடர்பாக வேண்டுகோள் விடுக்கப்படும் அனுமதிப்பத்திரம் மாத்திரமே புதுப்பிக்கப்பட்டிருந்தது. வேண்டுகோள் விடுக்கப்படாத அனுமதிப்பத்திரதாரர் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(i) முகாமைத்துவ வினைத்திறமையின்மை

--------------------------------------------------------------------

அதிகாரசபையின் சுற்றாடல் பாதுகாப்புத் துறையைப் பரிசீலிப்பதற்காக நடமாடும் இரசாயனகூடம் ஒன்றை அமைப்பதற்கு தலைமை அமைச்சிலிருந்து ரூபா 3,455,311 பெறப்பட்டிருந்தது. தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு அத்தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும், நடமாடும் இரசாயனகூடத்தைச் செயற்படுத்துவதற்கு ஆற்றல் மிக்க உத்தியோகத்தர் ஒருவரை பதவியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ii) செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) 2006 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 5 செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக ரூபா 270,064 சுற்றாடல் அதிகார சபையால் செலவிடப்பட்டிருந்தது. அத்தொகையைக் குறித்த நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(b) 2015 பெப்ரவரி 18 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு நேரடிப் பரிசோதனையின்போது சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களைப் பெறவேண்டிய 8 நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருந்தும் எந்தவொரு நிறுவனமும் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெறாதிருந்தமை புலனாகியது. அந்நிறுவனங்கள் யாவற்றாலும் சுற்றாடலுக்கு ஏதேனும் தீங்கு விளையலாம் என அவதானிக்கப்பட்டபோதும், அத்தீங்கைத் தவிர்க்கும்முகமாக போதிய கவனம் மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது.

**5.1.5 வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

---------------------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

-------------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------------

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(a) வருவாய்ச் செலவினமாகிய ரூபா 839,727 நிலையான சொத்துக்களாகக் கணக்கிலிடப்பட்டமையால் வருவாய்ச் செலவினம் அதேயளவு தொகையால் குறைத்தும் நிலையான சொத்துக்கள் அதேயளவு தொகையால் அதிகரித்தும் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(b) 2008, 2009 ஆம் ஆண்டுகளில் வருவாய்ச் செலவினமாகப் பதிவழிக்கப்பட்டிருந்த கட்டிட நிர்மாண வேலைச் செலவினமாகிய ரூபா 489,914 மீளாய்வாண்டில் மூலதனமாக்கப்பட்டபோதும், அதற்கான தேய்மானச் சீராக்கல் மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக, கட்டிடங்களது நிகர பெறுமதியானது அதேயளவு தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(c) படகமுவ சுற்றுலா நிலையத்தின் மீளாய்வாண்டிற்கான குத்தகை வாடகை வருவாய் ரூபா 648,000 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(d) நிகர பெறுமதி பூச்சியமாகக் காணப்படும் ரூபா 7,578,660 கிரயமுடைய 142 நிலையான சொத்துக்கள் 2014 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கணக்குகளில் காணப்பட்டதுடன் அவற்றை மீள் மதிப்பீடு செய்து தற்போதைய பெறுமதியில் கணக்கிலிடப்படாதிருந்தது.

(e) அதிகார சபையால் வடமேல் மாகாண சபையின் சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் எனும் பெயரில் ஹோட்டல் பாடசாலை ஒன்றை நடாத்துவதற்கு 8 ஆண்டுகளாக நடைபெற்ற நிர்மாண வேலைகளுக்கு ரூபா 85,739,716 செலவிடப்பட்டபோதும், அது மூலதனமாக்கப்படாதிருந்தது.

(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

(i) பெற வேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு உத்தியோகத்தர்களிடமிருந்தும் வெளி நபர்களிடமிருந்தும் பெற வேண்டியிருந்த மீதி ரூபா 7,091,606 ஆகும். இம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இம் மீதியில் 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பழைய பெற வேண்டிய மீதியாகிய ரூபா 724,136 உள்ளடங்கியிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதி ரூபா 7,775,872 ஆகும். இக் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளுள் 2 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் ரூபா 2,630,873 கூட்டுத்தொகையும் இருந்ததுடன் அம் மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயனற்ற செலவினம்

---

2014 ஜனவரி 01 முதல் வடமேல் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையில் நியமிக்கப்பட்ட 2 உத்தியோகத்தர்கள் முதலமைச்சரின் தனிப்பட்ட பதவியணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பொருட்டு மீளாய்வாண்டின்போது ரூபா 480,000 கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(உ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

-----------------------------------------------------------------------------------------------------------------

மாகாண நிதிசார் விதி 277.2 க்கமைய 2014 டிசெம்பர் 31 க்கு முன்னர் வரையப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 3,323,577 பெறுமதியுடைய 16 காசோலைகள் வழங்கப்படாது வைத்திருக்கப்பட்டன.

(ஊ) சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------

இப்பாகமுவ கலாகஸ்வெவ சுற்றுலா நிலையம் ஒன்றை அமைப்பதற்காக 2009 முதல் 2014 வரையான காலப்பகுதியின்போது ரூபா 1,408,565 பல்வேறு பணிகளுக்கும் செலவிடப்பட்டிருந்தபோதும், அது செயற்படாமையால், மேற்கொள்ளப்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகியது.

(எ) செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

செயற்பாட்டு வினைத்திறமையின்மை

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடமேல் மாகாண சபையின் கீழ் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி நிதியிலிருந்து ஹோட்டல் பாடசாலை ஒன்றை நடாத்துவதற்கான கட்டிடம் மற்றும் உபகரணம் என்பவற்றினது கொள்வனவுகளுக்கு ரூபா 95,526,483 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அதன் மூலம் வடமேல் மாகாண சபை எதுவித நலனையும் பெறாது அரசாங்கத்தால் பிறிதொரு வெளி நிறுவனத்திடம் புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் இச்சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ii) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் ஹோட்டல் பாடசாலை கற்கை நெறிகளை நடாத்துதல், மாணாக்கரைச் சேர்த்துக் கொள்ளுதல், பரீட்சைகளை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல், நேரடிப் பயிற்சியில் ஈடுபடுத்துதல் மற்றும் மேலும் மேற்படி கல்வி ஆகிய விடயங்களை நிறைவேற்றுதில் ஈடுபட்டுள்ளதுடன் அந்நிறுவனம் ஈட்டும் வருவாயில் எதுவித நலனையும் மாகாண சபை பெறாதுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

**5.1.6 முன் பள்ளிச் சிறார் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்பிக்கபட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

காசுப்பாய்ச்சல் கூற்றிலும் நிதிசார் செயலாற்றல் கூற்றிலும் ஆண்டிற்கான தேய்மானம் ரூபா 2,935,146 ஆகக் காட்டப்பட்டபோதும், கணக்கின் பிரகாரம் ஆண்டிற்கான சரியான தேய்மானப் பெறுமதி ரூபா 3,691,552 ஆகியமையால் ரூபா 756,406 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) செயற்பாட்டு மீளாய்வு

---

(i) சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) அதிகார சபையின் சாரதி ஒருவரும் சிற்றூழியர் ஒருவரும் முறையே 2014 டிசெம்பர் மற்றும் 2014 பெப்ரவரி தொடக்கம் முதலமைச்சரின் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு அதன் பொருட்டு அதிகாரசபையால் ரூபா 194,565 சம்பளமாக வழங்கப்படிருந்தது.

(b) அதிகாரசபையின் முக்கிய நோக்கங்களுக்குப் புறம்பான நடவடிக்கைகளில் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 122,300 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**5.1.7 வடமேல் மாகாண பிரதேச வள அபிவிருத்தி அதிகாரசபை**

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

(i) நிறுவனம் தொடர்ந்து செயற்படுதல்

---

மீளாய்வாண்டின்போது அமுல்படுத்தப்பட்டிருந்தன 6 செயற்திட்டங்களில் 3 நட்டத்தை ஈட்டியிருந்தன. அதற்கு முன்னைய ஆண்டுகளில் செயற்பட்டவாறிருந்த 4 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின்போது எதுவித செயற்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபடாமையால் செயலிழந்திருந்தன.

(ii) கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) வெகு நாள் சைபர் இயந்திர அச்சின் குறித்த பெறுமதியை இனங்கண்டு அதனைக் கணக்கிலிடவில்லை.

(b) PCR செயற்திட்டத்திற்குரிய 67 பரிசீலனைகளது வருவாயான ரூபா 150,750 கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது.

(c) சைபர் உற்பத்தி விற்பனைப் பெறுமதி ரூபா 1,825,505 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அதேயளவு தொகையால் இலாபமும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(d) புத்தகப் பெறுமதி ரூபா 14,979,985 ஆகவுள்ள நிலையான சொத்துக்களது பெறுமதி கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன், அச் சொத்துக்களுக்கு இணைவான திரண்ட தேய்மானமாகிய ரூபா 5,548,515 குறைத்துக் காட்டப்பட்டுமிருந்தது.

(e) PCR செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின்போது நடைபெற்ற மொத்தப் பரிசீலனைகளில் நூற்றுக்கு 79 சதவீதமான 952 பரிசீலனைகளது வருவாய் ரூபா 2,142,000 ஆகும். இது எவ்வாறு கணக்கிலிடப்பட்டது என்பது தொடர்பில் எதுவித விளக்கமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

---

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளது பெறுமதி முறையே ரூபா 5,049,115 மற்றும் ரூபா 3,381,610 என்பனவாகும்.

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

---

இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சின்னப்பாடு சினைப்படுத்தல் நிலையத்தில் ரூபா 151,150 புத்தகப் பெறுமதியிலான இருந்த பொருட்கள் தொலைந்து போயின.

(ii) நீரின் தன்மையைப் பரிசோதிக்கப் பயன்படும் ரூபா 294,922 பெறுமதியான இரசாயனப் பொருட்கள் காலாவதியாகியிருந்தன.

(உ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

அதிகாரசபைக்குச் சொந்தமான மீன் உற்பத்திச் செயற்திட்டம், மீன் தயாரிப்புச் செயற்திட்டம், சின்னப்பாடு சினைப்படுத்தும் நிலையம், முந்தல் அவதானிப்பு நிலையம், தலைமை அலுவலக வளாகம் என்பவற்றில் இருந்த ரூபா 16,077,000 பெறுமதியான 5 கட்டடிடங்களும் ரூபா 11,829,373 பெறுமதியான 24 இயந்திர உபகரணங்களும் 5 முதல் 8 ஆண்டுகளாகப் பயனற்றிருந்தன.

### 5.1.8 கைத்தொழில் சேவைப் பணியகம்

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

(i) கணக்கீட்டுக் கொள்கைகள்

---

(a) நிலையான சொத்துக்களது தேய்மான வீதம் மீளாய்வாண்டின்போது மாற்றத்திற்குள்ளாகியபோதும் அது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(b) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது சொத்துக்களது தேய்மானம் ரூபா 3,642,260 இனால் அதிகரித்திருந்தது. தேய்மானக் கொள்கை மாற்றத்தின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் பொருண்மையான தாக்கமொன்று விளைந்திருந்ததுடன் அது நிதிசார் விளைவுகளிலும் சாதகமற்ற தாக்கத்தை விளைவித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ii) கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 3 விடயங்களது பெறுமதியை கணக்குகளுடன் இணக்கஞ் செய்தபோது ரூபா 30,391,564 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

(i) பெற வேண்டிய மீதி

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட முன்னைய ஆண்டுகள் தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட 22 பெறவேண்டிய கணக்கு விடயங்களது ரூபா 9,835,761 மீதியை விசாரித்தறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு ஐந்தொகையில் குறிப்பிடப்பட்ட முன்னைய ஆண்டுகள் தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்த 2 ஆண்டுகளைக் கடந்துவிட்ட 18 கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகளது ரூபா 4,339,034 மீதியை விசாரித்தறிந்து அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (i) மாகாண நிதிசார் விதி 261.2.2 | மீளாய்வாண்டின்போது பெற்ற முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு முன்னரே அதே நபர்களுக்கு மீண்டும் ரூபா 754,000 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ii) மாகாண நிதிசார் விதி 546 | பிணை வைப்புச் செய்ய வேண்டிய எந்த ஒரு உத்தியோகத்தரும் பிணை வைப்பைச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. |

(உ) செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

முகாமைத்துவ வினைத்திறமையின்மை

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டு முடிவளவில் பணியகம் பேணிவந்த 713494 ஆம் இலக்க வங்கி நடைமுறைக் கணக்கு மற்றும் 713534 இலக்க வங்கி நடைமுறைக் கணக்குகளது காசேட்டின் பிரகாரமான மாதாந்த சராசரி மீதி ரூபா 4,959,270 மற்றும் ரூபா 3,790,966 என்பனவாகும். இருக்கவேண்டிய அதி குறைந்த மீதியை இனங்கண்டு மேலதிகத் தொகையை முதலீடு செய்வதற்கான சாத்தியக் கூறைக் கண்டறியவில்லை.

(ii) நிறுவனமானது 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 1,480,000 கொடுப்பனவு செய்து கொள்வனவு செய்த ஒரு இன்குயூபேட்டர் 2015 ஆம் ஆண்டு வரை பணியகத்தை வந்தடையாதிருந்தமை குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இவ்வழக்கு தொடர்பாக ரூபா 42,250 செலவு செய்யப்பட்டிருந்தது.

**5.1.9 வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

------------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------------

(i) கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(a) மீளாய்வாண்டின் கொள்வனவுத் திரும்பல் பெறுமதி ஆகிய ரூபா 532,933 இரு தடவைகள் கழித்துக் கொள்ளப்பட்டமையால் மீளாய்வாண்டினது இலாபம் ரூபா 532,933 கூடுதலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(b) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் சங்கீத உபகரணங்களது பெறுமதி ரூபா 270,117 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தலைமை அலுவலகம் மற்றும் 3 விற்பனை நிலையங்களில் இருந்த இறுதிக் கையிருப்புப் பெறுமதிகளுக்கடையே ரூபா 1,510,469 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) பெற வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------

விற்பனை நிலையங்கள் கடனுக்கு விற்பனை செய்திருந்த ரூபா 217,577 ஐ ஆண்டு முடிவு வரை முகாமைத்துவத்தால் அறவிட முடியாது போயிற்று.

(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) மாகாண நிதிசார் விதி | |
| (a) மா.நி.வி 261.2.2 | முற்பணம் பெறப்பட்டதற்கான பணி முடிவுற்ற உடனேயே அது தீர்த்து வைக்கப்பட வேண்டுமாயினும், 10 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 626,250 முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு 28 முதல் 267 நாட்களுக்கு இடைப்பட்ட காலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (b) மா.நி.வி 471.1 மற்றும் 471.2 | விற்பனை செய்யும் நோக்குடன் 2014 ஆம் ஆண்டிற்கென ரூபா 18,359,339 க்கான கையிருப்பு கொள்வனவு செய்யப்பட்டபோதும், ஒவ்வொரு கையிருப்பினதும் பெறுவனவுகள், வழங்கல் மற்றும் மீதி என்பன வெவ்வேறாக இனங்காணப்படும் விதத்தில் கையிருப்புப் பதிவேடுகள் பேணப்படவில்லை. |
| (ii) பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவை 3.4.3 ஆம் பந்தி | 2008 ஆம் ஆண்டின் பின்னர் வழங்குநர்கள் முறைப்படி பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

(உ) செயற்பாட்டு மீளாய்வு

---

(i) செயலாற்றல்

---

(அ) 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குருநாகலை விஸ்கம் விற்பனை நிலையத்தின் இலாபம் நூற்றுக்கு 66 சதவீதம் குறைந்திருந்தது.

(ஆ) சிலாபம் விஸ்கம் விற்பனை நிலையம் 2011 தொடக்கம் இற்றைவரை நிகர நட்டத்தில் இயங்கியதுடன் அந் நட்டமானது 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2014 ஆம் ஆண்டின் போது நூற்றுக்கு 51 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 298,119 அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(ii) முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---

வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 5 அறைகளது இறுதி வாடகை உடன்படிக்கைக் காலத்தின் பின்னர் வாடகை அடிப்படையில் அவற்றை வழங்கவோ அல்லது வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலோ அவற்றைப் பயன்படுத்தாது வெறுமனே இருந்தமையால் சம்பாதிக்கக் கூடியதாக இருந்த வாடகை வருவாயான ரூபா 1,425,000 நிறுவனத்திற்குக் கிடைக்காது போயிற்று.

(iii) செயற்பாட்டு விளைத்திறமையின்மை

---

வடமேல் மாகாண ஜனகலா மன்ற மாநாட்டுமன்ற நிர்மாண வேலை 2010 ஆம் ஆண்டில் ஆரம்பமாகி 2 கட்டங்களின் கீழ் ரூபா 10,752,379 செலவிடப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு முடிவிலும் அதனை முற்றாகப் பயன்படுத்தக் கூடிய நிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(iv) சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---------------------------------------------------------------------------------------------------

2014 ஆம் ஆண்டின்போது வடமேல் மாகாண ஜனகலா மன்ற நோக்கங்களுடன் இணங்காத விடயங்களில் ரூபா 384,660 செலவிடப்பட்டிருந்தது.

(v) வாகனப் பாவனை

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல் மாகாண ஜனகலா மன்ற சாரதிகளாகப் பணியாற்றும் சாரதிகளது வழமையான கையெழுத்துடன் ஒத்து வராத கையெழுத்திட்டு 17 அரசாங்க எரிபொருள் கட்டளைகளின் மூலம் ரூபா 100,071 பெறுமதியான 860 லீட்டர் எரிபொருள் வாகனக் குழாமிலுள்ள உத்தியோகத்தர்களால் பெறப்பட்டிருந்தது.

(ஆ) வடமேல் மாகாண ஜனகலா மன்ற சாரதிகளாகப் பணியாற்றுபவர்களது கையெழுத்தின்றி 6 அரசாங்க எரிபொருள் கட்டளைகளுக்கு ரூபா 25,435 பெறுமதியான 265 லீட்டர் எரிபொருளை வாகனத்தைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்கள் பெற்றிருந்தனர்.

**5.1.10 விளையாட்டுத்துறை நிதியம்**

--------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

------------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முகாமைத்துவ வினைத்திறமையின்மை

------------------------------------------------------------------

நிறுவனம் திறந்திருக்கும் நேரங்கள் காட்சிக்கு வைக்கப்படாமை, முறையான பாதுகாப்பு நடைமுறைகள் இல்லாமை என்பன காரணமாக சில குழுக்கள் நடுச்சாமம் வரை நிறுவனத்திலேயே தங்கியிருந்தது, காரணத்தால் மின்சாரம், நீர், ஊழியர்களுக்கு மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு என அதிகரித்த செலவு ஏற்படக் காரணமாயிற்று.

(இ) குறைவான நிதியப் பயன்பாடு

2006 ஆம் ஆண்டிற்கான மாகாண குறித்தொதுக்கிய மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விளையாட்டுத்துறைத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காகப் பெறப்பட்ட ரூபா 1,100,000 குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக நிலையான வைப்புக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டிருந்தது.

(ஈ) முறையாகச் சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சில்ப சாலிகாவ அமைந்துள்ள காணி 2015 ஆகஸ்ட் மாதமளவிலும் சுவீகரிக்கப்படாதிருந்தது.

### 5.1.11 சிறு நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய வீதிப் பராமரிப்பு நிதியம்

(அ) நிதிசார் கூற்றுக்கள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கெனப் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டியாகிய ரூபா 285,960 கணக்கிற்குக் கொண்டுவரப்படாதிருந்தது. முன்னைய ஆண்டிற்கான ரூபா 392,342 வட்டி வருவாயானது மீளாய்வாண்டிற்கான வட்டி வருவாயாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 106,382 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

முகாமைத்துவ வினைத்திறமையின்மை

-----------------------------------------------------------------

2004 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க சிறு நீர்ப்பாசன மற்றும் கிராமிய வீதிப் பராமரிப்பு நிதியச் சட்டவாக்கத்தின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்கும் சபையானது வடமேல் மாகாண தலைமைச் செயலாளரால் இரண்டு ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். எனினும், அந்நியமனமானது 2013 ஜூலை 31 அன்று முடிவுற்றிருந்தது. 2015 மார்ச் வரை புதிய சபையை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**5.1.12 முதலமைச்சரின் நிதியம்**

-----------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

செயலாற்றல்

----------------------

(i) வடமேல் மாகாணத்தில் வறுமைக்கான நிவாரணத்தை வழங்குதல், சமயங்களை உயர்வடையச் செய்தல் அல்லது சமய வழிபாடுகளை நடாத்துதல், வடமேல் மாகாணத்திற்கென சேவையாற்றியவர்களுக்கு ஆற்றியவர்களுக்கு வெகுமதி வழங்குதல் போன்ற விடயங்கள் முதலமைச்சரது நிதியத்தின் நோக்கம் மற்றும் குறிக்கோள்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் பொருட்டுப் போதிய கவனஞ் செலுத்தப்படவில்லை.

(ii) நிதியத்தின் ஒட்டுமொத்தச் செலவினத்தின் 87 சதவீதமான ரூபா 2,448,000 மருத்துவ உதவிகளுக்குச் செலவிடப்பட்டிருந்தது. அதற்குப் புறம்பாக, விளையாட்டுத்துறைப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் கல்விக்குமென முறையே ரூபா 250,000 மற்றும் ரூபா 80,000 மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(iii) 2005 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியுள்ள சுனாமி நிதியத்திற்குச் சேகரிக்கப்பட்ட தொகையில் எஞ்சிய ரூபா 2,000,000 பயன்படுத்தப்பட்டு 2008 ஆம் ஆண்டின்போது இலங்கை வங்கியில் நிலையான வைப்பொன்று ஆரம்பிக்கப்பட்டது. இது நாள்வரை அதற்கான வட்டியுடன் அது ரூபா 4,154,834 ஆக உயர்வடைந்துள்ளது. இந்நிதியம் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் எதுவித நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாது பயனற்றிருப்பது அவதானிக்கப்பட்டது.

**5.1.13 கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம்**

---------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

-------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், வழங்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்துவிட்ட ரூபா 269,549 பெறுமதியான 15 காசோலைகள் சம்பந்தமாக மாகாண நிதிசார் விதி 283.4 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிசார் மீளாய்வு

----------------------------

முகாமைத்துவ வினைத்திறமையின்மை

---------------------------------------------------------------

கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டத்திற்கான கணனி மென் அணி ஒன்றை நிறுவுவதற்கு 2010 ஆம் ஆண்டில் வெளி நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 168,000 வழங்கப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டு முடிவளவிலும் கணனி முறைமை நிறுவப்படாதிருந்தது.

## 5.2 வணிக முற்பணக் கணக்கு

### 5.2.1 வடமேல் மாகாண பயிற்சி நிறுவனம் - கணக்கு இலக்கம் 26002

(அ) நிதிசார் விளைவுகள்

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிறுவனத்தினது பெயரில் வாரியப்பொல இலங்கை வங்கிக் கிளையில் பேணப்பட்ட 0005817516 இலக்க வங்கி நடைமுறைக் கணக்கின் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 268,119 மீதியானது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரை நிதிசார் கூற்றுக்களில் காட்டப்படாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் பெற வேண்டிய வருவாயான ரூபா 537,167 கணக்கில் சோத்துக்கொள்ளப்படாமையால் ஆண்டிற்கான வருவாயும் நிகர இலாபமும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(iii) நிதிசார் கூற்றுக்களில் ரூபா 264,565 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட நூலகப்புத்தகங்களது பெறுமதி சேர்த்துக்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான சொத்துக்கள் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iv) வடமேல் மாகாண பயிற்சி நிறுவனத்தினது விலை மதிப்பீட்டிற்குரிய விலை மதிப்பீட்டு அறிக்கை 2013 ஜூன் 28 ஆந் திகதியன்று பெறப்பட்டிருந்தது. எனினும், அவ்விலை மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுத் தயாரிப்பில் கவனத்திற் கொள்ளப்படாமையால் ஐந்தொகையில் நடைமுறை அல்லாத சொத்துக்களது பெறுமதி ரூபா 31,639,415 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) மா.நி.வி 375.1 | நிதியாண்டின்போது முற்பணக் கணக்கு ஒன்றினது செயற்பாட்டின் மூலம் நிகர நட்டம் ஏற்படும் என எதிர்பார்க்கின் மற்றும் குறித்த அதிகாரியால் அவ்வாறான நட்டம் ஏற்படுதல் அங்கீகரிக்கப்படுமாயின், மதிப்பீட்டில் நிகர நட்டத்தைப் பதிவழிப்பதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், அவ்வாறு செய்யப்படவில்லை. |
| (ii) மா.நி.வி 377.1 | முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் மூலதனச் சொத்துக்களது தேய்மானம் வருடாந்தம் இலாப, நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் தேய்மானம் ஒதுக்க நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படவும் வேண்டும். இத் தேய்மானத்திற்குரிய தொகையை ஆண்டிற்கான மாகாண திறைசேரிப் புத்தகங்கள் தீர்த்து வைக்கப்படுவதற்கு முன்னர் பொதுவைப்புக் |

கணக்கில் (தேய்மான ஒதுக்க நிதியம்) செலவு வைக்கப்படுவதன் பொருட்டு மாகாண திறைசேரிக்குப் பணமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் (2011 முதல் 2014 வரை) அவ்வாறாக ரூபா 10,986,647 அனுப்பிவைக்கப்படாதிருந்தது.

(ii) மா.நி.வி 379

முற்பணக் கணக்கொன்றினது தொழிற்படு நட்டத்தைத் தீர்த்துவைப்பதற்கு வருடாந்த நிதிசார் கூற்றுக்களில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறு செய்யப்படாததுடன் 2014 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குக் கூற்றுக்களில் 2009 முதல் 2014 வரையான தொழிற்படு நட்டமாக ரூபா 7,648,369 காட்டப்பட்டிருந்தது.

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

(ை) செயலாற்றல்

---------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின்போது முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிக் கூறு நடாத்திய 177 பயிற்சிக் கற்கை நெறிகளுக்கு 10150 பயிற்சியாளர்கள் அழைக்கப்பட்டபோதும் அதில் 8528 பேர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். அதற்கமைய, பங்குபற்றாத பயிற்சியாளர்களது எண்ணிக்கை 16 சதவீதத்தைக் குறிக்கும் 1622 ஆகும். இதன் காரணமாக, இக்கற்கை நெறிக்கெனச் செலவிடப்பட்ட நிலையான கிரயமாகிய மின்சாரம், அரங்கக் கட்டணம், விரிவுரையாளர்களது கிரயம், நிறுவனப் பதவியணியினரது வேதனம் என்பவற்றிற்கு ஏறக்குறைய நூற்றுக்கு 16 சதவீதம் ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தப்பட முடியாது போயிற்று. மேலும், வடமேல் மாகாண பயிற்சி நிறுவனம் வருவாயாக எதிர்பார்த்த சேவைக் கட்டணம்,

உணவு வழங்கல் கட்டணம், பஸ் வண்டி வருவாய் போன்றனவும் இதன் காரணமாகக் கிடைக்காது போயிற்று.

(ஆ) 2014 ஆம் ஆண்டின்போது எதுவித புதிய பயிற்சிக் கற்கை நெறியும் வடமேல் மாகாண பயிற்சி நிறுவனத்தால் அறிமுகஞ்செய்து வைக்கப்படாததுடன் இலாபமீட்டியவாறு நடைபெற்ற கணனி மென் அணி உற்பத்தி வழங்கல் செயற்திட்டம் மூன்றும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(ii) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

---

பயிற்சி நிறுவனத்திற்குச் சொந்தமான ரூபா 1,668,125 பெறுமதியான 2 சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தன.

**5.2.2 வியாபார முயற்சி அபிவிருத்திச் சேவை ஒருங்கிணைந்த சினைப்படுத்தல் பண்ணை, மாவத்தகம – கணக்கு இலக்கம் 25002**

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டின்போது மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் அமைச்சினது செலவினத் தலைப்பிலிருந்து கமப் பண்ணை நடவடிக்கைகளுக்கெகன ரூபா 268,000 செலவிடப்பட்டபோதும், முற்பணக் கணக்கு நடவடிக்கைகளது இலாபத்தைக் கணிப்பிடுகையில் அச்செலவினம் கருத்திற்கொள்ளப்படவில்லை.

(ii) முன்னைய ஆண்டின் பொருட்டு பெறப்பட்ட தேங்காய் விற்பனை வருமானமான ரூபா 548,040 ஆண்டிற்கான வருமானமாக நாட்குறிப்பில் காட்டப்பட்டிருந்தது. எனினும், அத்தொகை ஆண்டிற்கான வருமானமாகவோ அல்லது திறண்ட நிதியமாகவோ சீராக்கல் செய்யப்படவில்லை.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

-------------------------------------------------------------------------------------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) மா.நி.வி 375(1) | முற்பணக் கணக்கு நடவடிக்கைகளில் நிகர நட்டம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுமாயின் நிகர நட்டத்தைப் பதிவழிப்பதற்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. |
| (ii) மா.நி.வ 377(1) | மூலதனச் சொத்துக்களது பெறுமதி குறைவது தொடர்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 604,478 தேய்மான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டபோதும், அத்தொகையை ''பொது வைப்புக்கணக்கின் தேய்மான ஒதுக்க நிதியத்தில்'' செலவு வைப்பதற்காக மாகாணத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கவில்லை. |

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

செயற்பாட்டு வினைத்திறமையின்மை

------------------------------------------------------------

(i) கமப் பண்ணையில் பணியாற்றும் சிற்றூழியர்களது ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தொகை ரூபா 24,900 குறைவாக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ii) கமப்பண்ணையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல நடைபெற்றபோதும், அவற்றை நிறைவேற்றாது 2014 ஆம் ஆண்டிற்கான கணக்கைத் தீர்த்து வைக்கையில் தலைமைச் செயலாளருக்கு ரூபா 664,834 அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

**5.2.3 கமப்பண்ணை நடவடிக்கைகளைச் செயற்படுத்துதலும் விதை நெல்லை வழங்குதலும் - கணக்கு இலக்கம் 25102**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

----------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் ரூபா 429,306 குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

---

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| i. | மா.நி.வி 377.1 | மூலதனச் சொத்துக்களது பெறுமதி குறைவது தொடர்பாக மீளாய்வாண்டின்போது ரூபா 1,792,480 தேய்மானத்திற்கென ஏற்பாடு வைப்புக் கணக்கில் தேய்மான ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்கப்படுவதற்காக பணமாக மாகாணத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. |
| ii. | மா.நி.வி 380 | தற்காலிக இலாப, நட்டக் கணக்கின் மூலம் நட்டம் புலப்படுமாயின் அதனை நிதிசார் கூற்றுக்களில் நட்டத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதியில் வரவு வைத்து குறித்த முற்பணக் கணக்கில் அதனை செலவு வைத்தல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டினது நிகர நட்டமாகிய ரூபா 2,401,216 முன்னைய ஆண்டுகளிலான நிகர நட்டங்களுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டு திரண்ட நட்டமாக ரூபா 67,036,480 ஐந்தொகையில் பொறுப்புகளிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. |
| (iii) | 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டம் | வாரியப்பொல மற்றும் கல்கமுவ கமப் பண்ணைகளில் ஊழியர்களுக்கான அதிகாரச் சட்டத்தின் பிரகாரமான தொகை ரூபா 384,048 குறைவாக நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| (iv) | 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | கமப் பண்ணைகளின் ஊழியர்களுக்குரிய ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய உதவுதொகையான ரூபா 172,742 அனுப்பிவைக்கப்படாதிருந்தது. |

(ஈ) செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

(i) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

--------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்கமுவ கமப்பண்ணையில் ஏறக்குறைய 28 ஏக்கர் காணி எதுவித பயனுமின்றி இருந்ததுடன் அப்பிரதேசக்கு இசைவான வருவாயைப் பெறக்கூடிய பயிர்களைப் பயிரிடுவது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படாதுமிருந்தது.

(ஆ) வாரியப்பொல கமப் பண்ணையில் 15 வகைச் சொத்துக்கள் அநேக காலமாக செயற்பாடின்றி கராஜ் மற்றும் களஞ்சியம் என்பவற்றில் இருந்தன. அவற்றை இனங்கண்டு அகற்றுவதற்கோ அல்லது சுவீகரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) இனங்காணப்பட்ட இழப்புகள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாரியபொல பண்ணையில் பால் உற்பத்திக்கான பசுக்களது செயற்திட்டத்திற்குச் செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட இழப்பு ரூபா 203,813 ஆகும்.

(ஆ) வாரியப்பொல பண்ணையில் 2012 ஆம் ஆண்டு டிசெம்பரில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 150,000 பெறுமதியான 5 கிலோகிறாம் சிறு முருங்காய் விதைகள் 2015 மார்ச் 27 அன்றும் பயன்படு காலம் முடிவுற்ற நிலையில் களஞ்சியத்தில் இருந்தன.

(இ) வாரியப்பொல பண்ணையில் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட கத்தரிக்காய் மற்றும் உழுந்து விதைகளை விற்பனை செய்ய முடியாமையாலும் அவற்றின் பாவனைக் காலம் கடந்துவிட்டதாலும் ஏற்பட்ட இழப்பு ரூபா 123,022 ஆகும்.

(ஈ) வாரியப்பொல பண்ணையில் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் தம்பல மற்றும் நிலக்கடலை ஆகியவற்றை பயிரிடுவதற்கு செலவிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ஏற்பட்ட இழப்பு ரூபா 77,653 ஆகும்.

**5.3 தாமதமாகப் பெறப்பட்ட வணிக முற்பணக் கணக்கு**

---

**5.3.1 புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் மூலப்பொருள் வழங்கல் அடங்கலாக புடவைக் கைத்தொழில் தொழிற்சாலைகளை உருவாக்குதலும் நிர்வகித்தலும் - 22302 – 2012 ஆம் ஆண்டு**

---

(அ) நிதிசார் கூற்றுக்கள்

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட லொறியின் கிரயமாகிய ரூபா 4,040,284 ஐந்தொகையில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் காட்டப்படாததுடன், லொறியின் வருடாந்தத் தேய்மானமும் வணிக முற்பணக் கணக்கில் சீராக்கல் செய்யப்படாதிருந்தது.

(ii) 1998 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 80,522 தொகையுடைய தொங்கற் கணக்கு மீதி மீளாய்வாண்டிலேனும் தேவையான சீராக்கலுக்குள்ளாகி பிழை திருத்தப்படாதிருந்தது.

(இ) பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------------------

நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்ட மிகை அறவீடுகள் மற்றும் இரட்டைப் பதிவுக் கணக்குத் தவறு எனக் காட்டப்பட்ட 2 கணக்கு மீதிகளது ரூபா 474,181 தொகையானது 2011 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தன. அம்மீதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) முகாமைத்துவ நலிவுகள்

------------------------------------------

கடன்பட்டோர் கட்டுப்பாடு

----------------------------------------

1998 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் ரூபா 9,143,540 கடனை அறவிடுவதற்கு முகாமைத்துவம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. கடனை அறவிடுவதில் உள்ள பாதுகாப்பற்ற நிலையைக் கருத்திற்கொண்டு வருடாந்தம் நட்டக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவுமில்லை.

**5.3.2 சிறு கைத்தெழரில் திணைக்களத்தின் மூலப்பொருள் வழங்கல் அடங்கலாகக் கைத்தொழில் தொழிற்சாலைகளை உருவாக்குதலும் நிர்வகித்தலும் தொடர்பான வணிக முற்பணக் கணக்கு – 22402 – 2012 ஆம் ஆண்டு**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

(அ) நிதிசார் கூற்றுக்கள்

--------------------------------

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

(i) வணிக முற்பணக் கணக்கு தொடர்பாக திணைக்களத்தின் வாக்குப் பணக் கணக்கிலிருந்து ரூபா 229,274 செலவிடப்பட்டிருந்தது.

(ii) மீண்டுவருஞ் செலவினமாகிய ரூபா 196,576 மூலதனச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iii) ஐந்தொகையில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோராக ரூபா 1,195,906 காட்டப்பட்டபோதும், இக் கடனை அறவிடுவதில் உள்ள சந்தேகத்தைக் கருத்திற் கொண்டு கடனுக்கான போதியளவு நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

(இ) கணக்காய்விற்கான சான்றின்மை

---

உரித்துறுதி, ஒப்படைப்பு ஆவணங்கள், நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மீதிகள் உருவாகிய விதம் என்பவற்றைக் குறிக்கும் பட்டோலை போன்ற கணக்காய்வுச் சான்றுகள் இன்மையால் ரூபா 27,525,315 க்கான 4 சொத்துக் கணக்கு மீதிகளைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரீசீலிக்க முடியாதிருந்தது.

**5.3.3 சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கைத்தொழில் பாடசாலைகளைப் பராமரித்தல் தொடர்பான வணிக முற்பணக் கணக்கு – 22403 – 2012 ஆம் ஆண்டு**

---

**(அ) நிதிசார் கூற்றுக்கள்**

---

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) காலங்கடந்த கடன்களுக்கு நட்டக் கடன் மற்றும் ஐயக் கடன் நிதியேற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக கடன்பட்டோரது காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாததுடன் அவ்வாறாக காலங்கடந்த கடன்களுக்கு நட்டக்கடன் மற்றும் ஐயக் கடனுக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவுமில்லை.

(ii) முற்பணக் கணக்கிலிருந்து செலவிடப்பட வேண்டிய மின்சாரம், நீர், தொலைபேசி, தீர்வையும் வரியும் போன்ற செலவினமாகிய ரூபா 229,906 திணைக்களச் செலவின விடயத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) இயந்திரங்கள் மற்றும் கட்டிடங்களது பழுதுபார்ப்பிற்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 1,047,844 மீண்டுவருஞ் செலவினமானது மூலதனச் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(iv) முற்பணக் கணக்கின் கீழ்வரும் 30 பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரிகளது பிணைப்பணம் மற்றும் அவற்றின் முதலீடுகள் தொடர்பான தகவல்கள் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை.

**(இ) கணக்காய்விற்கான சான்றின்மை**

குறித்த பதிவேடுகள், மதிப்பாய்வு அறிக்கைகள், மீதிகள் உருவாகியதைக் காட்டும் பட்டோலை, கட்டுப்பாட்டுக் கணக்குகள், மீதிகளை உறுதிப்படுத்தல் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 14,769,926 க்கான 9 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கணக்குகளைக் கணக்காய்வில் திருப்பதிகரமாகப் பரிசீலிக்க இயலாதிருந்தது.

**(ஈ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (i) மாகாண நிதிசார் விதி 375.1 | முற்பணக் கணக்கு நடவடிக்கையில் எதிர்பார்க்கப்படும் தொழிற்படு நட்டத்தைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நிதியேற்பாட்டை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) மாகாண நிதிசார் விதி 377.1 | நிலையான சொத்துக்களை வருடாந்தம் தேய்மானத்திற்குள்ளாக்கவும், அத் தேய்மானத் தொகையை ஒதுக்க நிதியக் |

கணக்கில் செலவு வைப்பதற்கும் அத் தொகையை சொத்தாக ஐந்தொகையில் காட்டுவதும் நடைபெறவில்லை.

## 6. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

### 6.1 செயலாற்றல்

---------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமேல் மாகாணத்தில் 46 பிரதேச செயலகங்கள் உள்ளபோதும், திணைக்களத்தில் பணியாற்றிய 47 சமுதாய சுகாதார உதவி மருத்துவ உத்தியோகத்தர்கள் நேரடி அமைச்சில் பணியாற்றப் பயன்படுத்தப்பட்டதால், 24 சமுதாய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர்கள் மாத்திரம் மாகாண ஆயுர் வேத திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்தனர். இதன் காரணமாக, மாகாணத்தின் சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் நடமாடும் சேவையைச் சிறப்பான மட்டத்தில் நிறைவேற்ற முடியாது போயிற்று.

(ஆ) சமுதாய சுகாதார சேவை சிகிச்சை முகாம்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தும் முன்னேற்றத்தைப் பரிசீலித்தபோது மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான புள்ளி விபரப் பதிவேட்டிற்கமைய சிகிச்சை முகாம்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் முன்னேற்றம் ஏறக்குறைய 32 சதவீதமாகவிருந்தது. மாதாந்தம் நடாத்த வேண்டிய உணவு மற்றும் போசனை நிகழ்ச்சித் திட்டம், பரவாத வியாதிகளுக்கான நிவாரண நிகழ்ச்சித்திட்டம், போதைப் பொருள் நிவாரண நிகழ்ச்சித்திட்டம், மருத்துவத் தாவரப் பயிர்செய்கை நிகழ்ச்சித்திட்டம், சுகாதாரக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றிக்கு நடமாடும் சிகிச்சை முகாம்களை நடாத்துவதில் ஆயுர்வேத திணைக்களம் குறைந்த கவனஞ் செலுத்தியிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 14 ஔடத வகைகளைக் கருத்திற் கொள்ளுமிடத்து உற்பத்தியின் அளவைப் போன்று 4 முதல் 450 சதவீதம் வரையிலான அளவு வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. போதியளவு மனித வளம் மற்றும் பௌதீக வளம் என்பன இன்மையால் தேவையான அளவு ஔடத வகைகளை ஆயுர் வேத திணைக்களத்தால் உற்பத்தி செய்ய முடியாதிருந்தது.

(ஈ) குருநாகலை கூட்டுறவு அபிவிருத்தி உப அலுவலகம், 13 கூட்டுறவு அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர் பிரிவுகளையும் 1054 பதிவு செய்யப்பட்ட சங்கங்களையும் உள்ளடக்கியதாகும் என அவதானிக்கப்பட்டதுடன் தேசிய அரச மன்றத்தின் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க அதிகாரச் சட்டத்தின் (viii) ஆம் அத்தியாயத்திற்கமைய குருநாகலை மாவட்டத்தில் அமைந்துள்ள 623 தொழிற்படு கூட்டுறவுச் சங்கங்களில் 122 கூட்டுறவுச் சங்கங்களில் 2014 ஆம் ஆண்டின் போது கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்தது. 2014 ஆம் ஆண்டில் 854 கணக்காய்வுகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டபோதும், அவற்றுள் பெருமளவு கணக்காய்வு 2009,2010,2011,2012 ஆண்டு காலப் பகுதிக்குரியனவாகும். கணக்குகளைச் சமர்ப்பித்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 18 கூட்டுறவுச் சங்கங்களது கணக்காய்வு ஆரம்ப முதலே மேற்கொள்ளப்படாதிருந்தது. ஏறக்குறைய 73 சங்கங்களது கணக்காய்வு 2010,2011 அல்லது 2012 ஆம் ஆண்டுகளின் பின்னர் நடைபெறவில்லை.

(உ) வடமேல் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான குருநாகலை, குளியாப்பிட்டிய, சிலாபம், ஆகிய உப அலுவலகங்களில் கணக்கொழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை 386 ஆகும். இவற்றுள் 108 மாத்திரமே கணக்கொழிப்பிற்குள்ளாகின. பதவியணியினர், பற்றாக்குறை, கணக்கொழிப்பிற்குள்ளான சங்கத்திற்குக் குறித்த உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்ய முடியாது போனமை, ஆவணங்களைத் தேடுவதில் நிலவிய இடர்கள், கடன்பட்டோரைக் கண்டுபிடித்தலில் உள்ள சிரமம், விலை மதிப்பிடுவதில் நிலவிய சிரமம் மற்றும் விற்பனை செய்வதில் நிலவிய தடைகள் போன்ற காரணங்களால் 278 சங்கங்கள் கணக்கொழிப்பு நடவடிக்கைகளை முடிவு செய்யாதிருந்தன.

(ஊ) நோக்கங்களை எய்தாமை

----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சிறு கைத்தொழில் திணைக்கள வணிக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளது நோக்கை நிறைவேற்றுவதில் நேரடியாக சம்பந்தப்பட்ட 9 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 3,280,087 கூட்டுத்தொகையுடைய பல்வேறு செலவினம் ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்தே மேற்கொள்ளப்பட்டதால் வருடாந்த நிதிசார் கூற்றுக்கள் மூலம் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டு நோக்கம் நிறைவேறாது போனமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) சிறு கைத்தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டத்தின் பிரகாரம் ஒரு தச்சு வேலைப் பாடசாலையானது குறைந்தது 3 இலட்சத்திற்கான கட்டளையை நிறைவேற்ற வேண்டுமாயினும், 6 தச்சு வேலைப்பாடசாலைகள் ஒரு கட்டளையையேனும் நிறைவேற்றவில்லை.

(iii) சிறு கைத்தொழில் திணைக்களத்தின் 2013 – 2017 ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் 1196 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தபோதும், 2014 ஆம் ஆண்டில் 640 மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். அதில் சான்றிதழ் பெற்றுச் சென்றவர்களது எண்ணிக்கை 78 ஆகும்.

(iv) சமூக நலனோம்பல் அமைச்சினால் வருடாந்த மதிப்பீட்டுப் பதிவேட்டின் பிரகாரம் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 21 குடிநீர் செயற்திட்டங்களில் கிராமிய குறுக்கு வீதிகளும் 17 சனசமூக நிலையங்களும் கைவிடப்பட்டிருந்தன.

**6.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

---------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டுக்கான பொருட் கணிப்பின்போது அகற்றப்படாதிருந்த ஆளுநரது உத்தியோகபூர்வ மனையில் பயன்படுத்தப்பட்டவாறிருந்த வேலைப்பாடுடன் கூடிய தேக்கிலான கட்டில் மற்றும் 2 இரட்டை கட்டில்கள் அடங்கலாக 3 கட்டில்கள் அவ்விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) சிறு கைத்தொழில் திணைக்களம் வலக்கும்புற மட்பாண்ட நிலையத்திற்கான 2013விசேட செயற்திட்டத்தின் கீழ் ரூபா 1,485,000 செலவழித்துக் கொள்வனவு செய்திருந்த நடமாடும் மின்சார அடுப்பிற்கான தொழில்நுட்ப மாதிரிக்கமைய 2 ஆண்டுகால உத்தரவாத சான்றிதழொன்று பெறப்பட வேண்டும். 2014 ஜனவரி 12 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட சேவை உடன்படிக்கைப் பிரகாரம் உத்தரவாதச் சான்றிதழ் ஓராண்டிற்கே பெறப்பட்டிருந்ததுடன் 2014 ஏப்ரல் மாதத்திலேயே அடுப்புகள் சிறு கைத்தொழில் திணைக்களத்திற்கு கிடைத்திருந்ததுடன் அடுப்பினது உத்தரவாதக் காலம் 8 மாத வரம்பிற்கு உட்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 5 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள 527 விண்ணப்பத்தாரர்கள் காணி ஆணையாளரது 157 பதிவேட்டில் பதிவாகி அனுமதிப்பத்திரமின்றி அரச காணிகளைப் பயன்படுத்தியவாறிருந்த போதும், தகைமை வாய்ந்த விண்ணப்பத்தாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை புத்தளம் பிரதேச செயலகம் மேற்கொள்ளவாதிருந்தமையும் தெரிய வந்தது.

(ஈ) சந்தலங்காவ மாவட்ட வைத்திய சாலையின் பிரதான ஆய்வுகூடத்தில் பயன்படுத்தும் Centrituge எனும் இயந்திரம் பழுதடைந்தமையால் 2012 ஆம் ஆண்டு முதல் (SERUM CHOLESTEROL) எனும் நோயாளர் பரிசோதனை தடைப்படுத்தப்பட்டிருந்தது.

(உ) உபகரணங்களைப் பழுதுபார்பதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் குறித்த காலத்தில் கிடைக்கப் பெறாமையால் ஜீவ வைத்திய பொறியியல் கூறில் கிடைக்கப்பெற்ற 72 உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட முடியாதிருந்தன.

(ஊ) மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பரவாத நோய்களுக்கான கூறுக்குச் சொந்தமான ''சுவதா பியச'' சரீர யோக்கியதை நிலையத்தில் ரூபா 1,835,535 பெறுமதியான இன்வென்டரிப் பொருட்கள் முறையாக நியமனம் பெறாதிருந்த உசாத்துணையாளர் ஒருவரது பொறுப்பில் இருந்தது.

(எ) தலைமை அமைச்சானது சிறுநீரக நோயாளிகளுக்கு சுத்தமான நீர் வழங்கும் நோக்குடன் கொள்வனவு செய்த ரூபா 1,246,000 பெறுமதியான 500 களிமண்ணாலான நீர் வடிக்கும் கருவிகளில் 144 வெறுமனே களஞ்சியப்படுத்தப்படடிருந்தன. இவ்வாறாகக் கொள்வனவு செய்யப்பட்ட சிகப்பு நீர் வடிக்கும் கருவிகளில் கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) வடிக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தியபோது அவற்றின் சுவர்கள் சிறுதுண்டுகளாக உடைந்து போனமை.

(ii) நீர் வடிகளில் சிறு களிமண் துகல்கள் கரைந்தவாறிருந்தன.

(iii) அவ்வாறான துகல்கள் பிளாஸ்டிக் பாத்திரத்தின் அடிப்பாகத்தில் தேங்கியவாறிருந்தன.

(iv) நீர் வடியின் வேகம் மணிக்கு ஒரு லீட்டராகும். ஆகவே, குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள குடும்பங்களுக்கு அது போதியதாக அமையவில்லை.

(v) திறந்த சந்தையில் இவற்றிற்கான உதிரிப் பாகங்கள் பெற முடியாதுள்ளமை

(vi) நீர்க்குழாய் சரியான அளவில் அமையாததால் சில குழாய்களிலிருந்து நீர் கரிந்தவாறுள்ளமை

(ஏ) தலைமை அமைச்சினால் 2014 டிசெம்பர் 31 அன்று ரூபா 26 மில்லியன் செலுத்தி நிர்மாணித்த நீர் சுத்திகரிப்புக் கூறு தொடர்பாக மேற்கொண்ட நேரடிப் பரிசோதனையின்போது கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

(i) நீர் சுத்திகரிப்பிற்கான பிளாஸ்டிக் தாங்கி சூரியக் கதிர் நேரடியாகப் படுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

(ii) பிரதான நீர்க் குழாய்க்கும் ஏனைய சிறு நீர்க் குழாய்களுக்கும் தாழ்ப்பாள் போடுவதற்கான ஏற்பாடு இல்லாதிருந்தது.

(iii) காட்டு யானைகளது அச்சுறுத்தல் நிலவும் இடங்களில் இவை அமைக்கப்பட்டிருந்தன.

(iv) மின்சார வேலியோ அல்லது பாதுகாப்பு வேலியோ இதற்கென அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(v) நீர்க கட்டமைப்பின் உள்ளீட்டில் ஏறக்குறைய 50 சதவீதமான நீர் விரயமாகியவாறிருந்தது.

(vi) நீர் விரயம் காரணமாக வறட்சியான காலங்களில் நீர் குறைவதைத் தடுக்க முடியாத நிலை தென்பட்டது.

(ஐ) வடமேல் மாகாண தலைமை அமைச்சால் 2014 ஆம் ஆண்டில் குறித்தொதுக்கிய அடிப்படையிலான நிதியேற்பாட்டின் கீழ் ரூபா 21,468,948 செலவழித்து கிராமிய சமுதாய மட்டத்தில் தன்னார்வ அமைப்புக்களுக்கு விநியோகிப்பதற்காக 15,000 பிளாஸ்டிக் நாற்காலிகள், 200 சாஸ்பான்கள், 50 ஒலிபெருக்கிகள், 200 உருக்கு அலுமாரிகள், 1324 எஸ்பஸ்டஸ் தகடுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல் என்பன தொடர்பாகப் பல குறைபாடுகள் நிலவியமை கணக்காய்வு மாதிரிச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கிழே காணப்படுகின்றன.

(i) குருநாகல் மாவட்டத்தில் உள்ள 10 குறைந்த வருமானம் பெறும் பிரதேச செயலகங்களில் உள்ளோருக்கு பிளாஸ்டிக் நாற்காலிகள் எதுவுமே வழங்கப்படாதிருந்ததுடன் பண்டுவஸ்நுவர மேற்கு மற்றும் கிழக்கு பிரதேச செயலகங்களுக்கு மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்ட நாற்காலிகளில் 56 சதவீதமானவை வழங்கப்பட்டிருந்தமையும் ரூபா 4,625,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 5000 பிளாஸ்டிக் நாற்காலிகளது விநியோகம் தொடர்பான மாதிரிச் செவ்வைகளின்போது அவதானிக்கப்பட்டது.

(ii) 2014 ஆம் ஆண்டில் குறித்தொதுக்கிய அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 21,468,948 பெறுமதியான பொருட்களில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட விநியோகப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 685,763 பெறுமதியான பொருட்களைக் குறித்த தரப்பினரால் நல்ல நிலைமையில் பெற்றிருந்ததாகக் குறிப்பிடப்பட்டபோதும் குறித்த பொருட்கள் சரியான நபர்களைச் சென்றடையாமை கணக்காய்வு நேரடிப் பரிசோதனைகளின்போது அவதானிக்கப்பட்டது.

(iii) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பொருள் விநியோகப் பதிவேட்டில் உள்ளவற்றுள் 21 சந்தர்ப்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நேரடிப் பரிசோதனைக்குள்ளாகின. ரூபா 701,634 பெறுமதியான 4 வகைப் பொருட்கள் சம்பந்தமாக விநியோகப் பதிவேட்டில் காணப்பட்ட கையெழுத்துக்களும் உத்தியோகபூர்வ முத்திரைகளும் சங்கங்களது / நிறுவனங்களது / நபர்களது கையெழுத்துக்கள் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரைகள் என்பவற்றுடன் ஒத்துவராமை அவதானிக்கப்பட்டது.

(iv) பத்து நபர்களுக்கிடையே ரூபா 436,900 பெறுமதியான 289 கூரைத் தகடுகள் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதும், குறித்த நபர்கள் அப்பிரதேசவாசிகள் அல்லது வாக்காளர் இடாப்பில் அடங்குபவர்களாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) தெரிவு செய்யப்பட்டதொரு சங்கத்திற்கு மாத்திரமே ரூபா 739,000 பெறுமதியான 600 பிளாஸ்டிக் நாற்காலிகளும் 16 உருக்கு அலுமாரிகளும் வழங்கப்பட்டிருந்தன.

(ஒ) காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கத்தின் தேவைகளுக்குத் தனி நபர் காணிகளைச் சுவீகரிக்கும்போது சுவீகரிக்கப்பட்ட தினத்தன்றே விலைமதிப்பிற்குள்ளான தொகை கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். கொடுப்பனவு தாமதமாகும் சகல சந்தர்ப்பங்களிலும், இழப்பீடு கொடுப்பனவு செய்யப்படும் காலப்பகுதிக்கு நூற்றுக்கு 7 சதவீத வட்டி வழங்கப்பட வேண்டும். இதற்கமைய, ஆரம்ப

நில அளவை இலக்கம் 4484 இன் கீழ் 6 காணித் துண்டுகளுக்கான கொடுப்பனவு தாமதமாகியதன் காரணமாக முந்தல் பிரதேச செயலகத்தால் வட்டியாக ரூபா 2,101,484 செலுத்தப்பட்டிருந்தது.

## 6.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிக்கவரட்டிய ஆதார வைத்தியசாலையிலும் சந்தலங்காவ மாவட்ட வைத்தியசாலையிலும் 2013 ஆம் ஆண்டிற்கான பொருட் கணிப்பு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட 301 பொருட்களின் 731,225 கூறுகளினது மிகையும் 315 பொருட்களின் 291,784 கூறுகளினது குறைவும் சம்பந்தமாக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டளவில் வடமேல் மாகாணத்தில் 126 பாடசாலைகளை மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் அதில் 72 பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டும் எஞ்சிய 54 பாடசாலைகள் ஒப்படைக்கப்படாதுமிருந்தன. மூடப்பட்ட பாடசாலைகளில் குருநாகலை கல்வி வலயத்தில் 21, குளியாப்பிட்டிய கல்வி வலயத்தில் 22, இப்பாகமுவ கல்வி வலயத்தில் 7, சிலாப கல்வி வலயத்தில் 2, புத்தளம் கல்வி வலயத்தில் 7 என்பன எதுவித நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(இ) மாகாண கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமாக 295 உத்தியோகபூர்வ மனைகள் இருந்தன. அதில் ஏறக்குறைய 60 உத்தியோகபூர்வ மனைகளில் உத்தியோகத்தர்கள் வசித்து வந்ததுடன் 107 மனைகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதும் அவற்றை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தால் 2009, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 1392 கூறு விளையாட்டுத் துறைப் பொருட்கள் விநியோகிக்கப்படாதிருந்தன.

(உ) பிரத்தியேக பரீட்சைகளை அரசாங்க பாடசாலைகளில் நடாத்தும் முறையும் கட்டணம் அறவீடும் தொடர்பான பரிசீலனையின் போது வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தினால் பரீட்சை மண்டபத்திற்கான கட்டணத்தை அறவிடும்

போது கடைப்பிடிக்க வேண்டிய முறையான அடிப்படை அறிமுகஞ் செய்து வைக்கப்படாதிருந்ததுடன் தனியார் நிறுவனங்கள் அரசாங்க பாடசாலைகளில் பரீட்சைகளை நடாத்தும்போது குறித்த பரீட்சைகளை நடாத்துவதற்கு முன்னர் மண்டபக் கட்டணத்தை அறவிடும் முறை ஒன்று இல்லாததும் மண்டபக் கட்டண அறவீட்டில் தாமதங்கள் மற்றும் அறவிடப்படாமைகள்.

(ஊ) நிக்கரவட்டிய வலய அலுவலகத்தில் 6 ஆண்டுகளுக்கு முன்னர் பெறப்பட்ட 1603 ஆசிரியர்களுக்கான கைநூல்கள் முறைப்படி விநியோகிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அவை பாதுகாப்பின்றி களஞ்சியப்படுத்தப்பட்டு இருந்தமையால் அழிவுற்றவாறிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(எ) நிக்கவரட்டிய, கிரி உல்ல, இப்பாகமுவ வலயக் கல்வி அலுவலகங்களின் 27 ஆசிரியர்கள் கணிதத்தில் சித்தியெய்தாமை, பெறுபேறுகள் உறுதிப்படுத்தப்படாமை, குறித்த தகவல்கள் மாகாண கல்வி அலுவலகங்களுக்குத் தொடர்புபடுத்தப்பட்டபோதும் பதில் கிடைக்கப்பெறாமை, தகைமைகள் பூர்த்தி செய்யப்படாமை கோவைகள் தொலைந்து போனமை போன்ற விடயங்களால் நிரந்தரமாக்கப்படாதிருந்தனர். இதற்கமைய, ஆசிரியர்கள் நியமனஞ் செய்யப்படுகையில் முறைப்படி தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பது பரீசிலிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தம்பதெனிய ஆதார வைத்தியசாலைக்கு மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2 சந்தர்ப்பங்களில் செலவாகிய கிரயம் மற்றும் மூன்றாம் தடவையாகக் கொள்வனவு செய்யப்படுகையில் விலை அதிகரித்திருந்தமை என்பனவற்றைக் கருத்திற் கொள்ளும்மிடத்து நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதிசார் இழப்பு அண்ணளவாக ரூபா 449,824 ஆகவிருந்தது.

(ஆ) புடவைக் கைத்தொழில் திணைக்களமானது ஒரே தடவையில் 60 கிலோ நூல் நூற்பதற்கு ஏற்றவாறான நூல் நூற்கும் இயந்திரமொன்றினை கொள்வனவு செய்யத் திட்டமிட்ட போதும், 12 ½ கிலோ நூல் நூற்கும் இயந்திரமே

கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் மூலம் நாளொன்றுக்கு 4 தடவைகள் மாத்திரமே நூல் நூற்பதற்கு இயலுமாகையால் நாளொன்றிக்கு நூற்பதற்குள்ள நூலின் அளவு 50 கிலோ என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஆகவே, நாளாந்தம் அவிக்கப்படும் 100 கிலோ நூலில் எஞ்சும் 50 கிலோ நூலானது சாதாரண முறைப்படி நூற்கப்படுவதால் செலவழிக்கப்படும் தொகைக்கு ஈடான வினைத்திறனை நிறுவனம் பெறாதிருந்தது.

(இ) வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் சில பாடசாலைகளில் இருந்த பழுதடைந்த மேசை நாற்காலிகள் வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகார சபையின் ஊடக பழுதுபார்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எனினும், மாகாண நிதிசார் விதிகளுக்கமைய முறைய கட்டண வீதமும் மாதிரி அமைப்பும் சமர்ப்பிக்கப்படாது வடமேல் மாகாண இயந்திர சாதன அதிகார சபையானது உபகரணங்களது சகல பகுதிகளையும் பழுதபார்க்காது ஒரு சிலவற்றை மாத்திரமே பழுதுபார்த்திருந்தது. ஒவ்வொரு பழுதுபார்த்தலதும் தன்மைக்கேற்ப கொடுப்பனவகளை மேற்கொள்ளாது முற்றாகவே பழுதுபார்த்தல் நடைபெற்றதாகக் கருத்திற்கொண்டு வடமேல் மாகாண அதிகார சபைக்கு ரூபா 4,213,536 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| நிறுவனத்தின் பெயர் | சொத்துக்களின் எண்ணிக்கை | பெறுமதி | பயனற்றிருந்த காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் | ஔடதம், சத்திரசிகிச்சை உபகரணம் | 11,974,316 | - |
| | நுகர்வுப்பொருள் வகை | - | |
| | வாகனம் | - | ஓராண்டு |
| புத்தளம் மாவட்டம் சுகாதார சேவைகள் | ஔடதம் | 49,857 | - |
| | 08 வாகனங்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| குருநாகலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் | 21 வாகனங்கள் | | |
| ரிதீகம மருத்துவமனை | கணனிமென்அணி முறைமை | 188,000 | 1 ½ ஆண்டுகள் |
| மாவத்தகம மருத்துவமனை | Bio Chemistry Analizer | 312,500 | - |
| சந்தலங்காவ மாவட்ட மருத்துவமனை | Cardiac Defibrillator | - | 2 ஆண்டுகள் |
| நிக்கவரட்டிய ஆதார மருத்துவமனை | குளிரூட்டி | - | 3 ஆண்டுகள் |
| நாரம்பல ஆயுர்வேத மருத்துவமனை | உன்னக தொலைபேசி முறைமை | - | 02 ஆண்டுகள் |
| ஆயுர்வேத திணைக்களம் | அம்புலன்ஸ் | - | 1 ½ ஆண்டுகள் |
| வென்னப்புவ பிரதேச பொறியியலாளர் அலுவலகம் | 1 வாகனம் | - | 5 ஆண்டுகள் |
| தலைமை அமைச்சு | 1 வாகனம் | - | 1 ஆண்டு |
| சமூக நலனோம்பல் அமைச்சு | 14 நீர் வடிகள் | - | 1 ஆண்டு |
| | 03 கபட்கள் | - | 1 ½ ஆண்டுகள் |
| | 33 வைட் போட் | - | 1 ½ ஆண்டுகள் |
| சிறுவர் பராமரிப்பு, நன்னடத்தைத் திணைக்களம் | 2 கணனித் துணைப் பொருட்கள் | - | - |
| | 14 இயந்திரங்கள் | - | - |
| | 5 பிண்டர்கள் | - | - |
| | 2 பென்டிறைவ்கள் | - | - |
| | 2 பிரீப் கேஸ்கள் | - | - |
| | 5 மின் விசிறிகள் | - | - |
| புடவைக் கைத்தொழில் திணைக்களம் | 1 வாகனம் | - | - |
| சிறு கைத்தொழில் திணைக்களம் | 1 மின் அடுப்பு | 528,500 | 1 ஆண்டு |
| | 9 பயிற்சி நிலையங்கள் | - | - |

குளியாப்பிட்டி மருத்துவ மனையில் சிகிச்சைக்கான கழிவுப் பொருட்களை எரியூட்டுவதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 1,246,257 செலவழித்து மருத்துவ மனையின் ஐந்து மாடிக் கட்டிடத்தின் மேல் மாடியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சூளை கட்டிடத்தில் இருப்பதால் சுற்றாடல் பாதிப்படையும் எனும் காரணத்தால் 2012 ஆம் ஆண்டில் 14 நாட்கள் மாத்திரம் கழிவுப் பொருட்கள் எரியூட்டப்பட்டதன் பின்னர் அந் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

## 6.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் மாகாண சுகாதார அமைச்சரது கையடக்கத் தொலைபேசிக் கொள்வனவிற்கு ரூபா 113,490 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஜுலை 18 ஆந் திகதி நடைபெற்ற ஊடகக் கலந்துரையாடலுக்குச் சமூகமளித்த வடமேல் மாகாண சபையின் 59 ஊடகவியலாளர்களுக்கும் பதவியணியினருக்கும் உணவு வழங்குவதற்கு சமூக நலனோம்பல் அமைச்சு செலவழித்த தொகை ரூபா 112,250 ஆகும்.

(இ) அமைச்சரின் பிரத்தியேக தேவைக்கென புத்தாண்டு வாழ்த்து மடல்களை அச்சிடல், அதனை அஞ்சலில் அனுப்புவதற்கு முத்திரைகளைப் பெறுதல் மற்றும் தேசத்துக்கு மகுடம் விசேட வானொலி ஒலிபரப்பில் அமைச்சரின் விசேட செய்தியை ஒலிபரப்புதல் போன்றவற்றிற்கு சமூக நலனோம்பல் அமைச்சு நிதியிலிருந்து ரூபா 65,820 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) சிலாபம் ஆனந்த தேசிய பாடசாலையில் நியமிக்கப்பட்ட அதிபர் தொடர்பாக நிலவிய சிக்கலான நிலமை தீர்த்து வைக்கப்படாமையால் 2 அதிபர்கள் 3 மாதங்களுக்கு மேலாக வலய அலுவலகத்திற்கு அறிக்கையிட்டிருந்ததுடன் அவர்களுக்கு ரூபா 320,070 சம்பளமாக வேலை எதுவுமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை ஆசிரியர் சேவை I ஆம் வகுப்பு உத்தியோகத்தர் ஒருவர் சமாதான கல்வி ஆசிரிய ஆலோசகராக மாகாண கல்வித் திணைக்களத்தில் இணைக்கப்பட்டிருந்தபோதும், அந்த உத்தியோகத்தர் திணைக்கள அலுவலகத்தில் ஆற்ற வேண்டிய பணிகள் எதுவும் இல்லாதிருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுடன் 2012 மார்ச் முதல் 2015 மே வரை சம்பளமாக ரூபா 1,635,454 செலுத்தப்பட்டிருந்தது.

## 6.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண சபைத் தலைவர் உட்பட 7 அங்கத்தவர்கள் சிங்கப்பூருக்கும் தாய்லாந்துக்கும் கல்விச் சுற்றுலா மேற்கொண்டதன் பொருட்டு தங்குமிட மற்றும் இடை நேர் செலவினங்களுக்கு ரூபா 1,202,283 கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில் சபைச் செயலாளர் அலுவலகத்தால் அவர்களுக்கு ஹோட்டல் வசதிகளுக்கும் வேறு வசதிகளுக்குமென ரூபா 785,195 கொடுப்பனவு வழங்கப்பட்டுமிருந்தது.

(ஆ) சிறு கைத்தொழில் திணைக்களம் மற்றம் புடவைக் கைத்தொழில் திணைக்களம் என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட வென்னப்புவ கைப்பணிக் கண்காட்சி வருவாய் மற்றும் செலவினம் என்பவற்றை ஒப்பிடுகையில் திணைக்களத்திற்கு ரூபா 966,345 நட்டம் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

(இ) ரிதீகம மாவட்ட மருந்துவ மனையில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் காலாவதியான ரூபா 55,945 கையிருப்புகளது 45,862 கூறுகளை புத்தகங்களில் பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் மேலதிக மருந்துப் பொருட்களை வேறு மருத்துவ மனைகளது தேவைகளுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்தது.

(ஈ) மாவத்தகம மாவட்ட மருத்துவ மனையில் 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட களஞ்சியப் பொருட் கணிப்பின்போது புலனாகிய ரூபா 41,942 பெறுமதியான காலாவதியாகிய ஔடதக் கையிருப்பை அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(உ) மாகாண சுகாதாரத் திணைக்களதிற்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி ஒன்று காப்புறுதி காலாவதியாவதற்கு முன்னர் புதுப்பிக்கப்படாமையால் அவ்வண்டி விபத்துக்குள்ளாகியதால் ஏற்பட்ட ரூபா 203,800 இழப்பை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று.

(ஊ) 2013 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 4 விபத்துக்கள் காரணமாக சாரதிகளிடமிருந்து அறவிட வேண்டிய இழப்புத் தொகை ரூபா 208,420 ஆகும். அத்தொகையை மீளாய்வாண்டு முடிவிலும் மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் அறவிடப்படாதிருந்தது.

(எ) நாரம்மல ஆயுர் வேத மருத்துவ மனையில் 2014 ஆகஸ்ட் 11 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது 14 அரவிந்த ஆசவய போத்தல்கள், 4 கிலோ கிறாம், 500 கிறாம் எடையுடைய கட்பலாதி சூரணம் மற்றும் 8 கிலோ கிராம் சீனி என்பன காலாவதியாகியிருந்தமை இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கொடவெல ஜனசலு நிலையத்தில் 2012 முதல் அறவிட வேண்டியுள்ள ரூபா 2,625,554 மற்றும் கையிருப்புக் குறைப்பு என்பன அச்சமயம் பொறுப்பாக இருந்த உத்தியோகத்தரான புடவைக் கைத்தொழில் ஆலோசனையாளரிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஐ) புடவைக் கைத்தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான கொடவெல நூல் களஞ்சியத்தில் கையிருப்பைத் தவறாகப் பயன்படுத்துதல், கையிருப்புப் புத்தகத்தில் மோசடிப் பதிவுகளை ஏற்படுத்தல் மற்றும் நூல் கையிருப்புகளை மறைத்து வைத்தல் என்பவற்றின் பொருட்டு அறவிடப்பட வேண்டிய ரூபா 595,031 மற்றும் நூல் களஞ்சியத்தின் உபகரணங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை என்பவற்றிற்காக ஆலோசனையாளரிடமிருந்து அறவிடுவதற்குத் தீர்மானித்த ரூபா 192,826 குறித்த புடவைக் கைத்தொழில் ஆலோசனையாளரிடமிருந்து மீளாய்வாண்டு முடிவிலும் அறவிடப்படாதிருந்தது.

## 6.8 ஒப்பந்த நிர்வாகத்தில் உள்ள குறைபாடுகள்

----------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரிதீகம, வாரியபொல, மஹவ, குளியாப்பிட்டி ஆகிய பிரதேச பொறியியலாளர் அலுவலகங்களால் நிறைவேற்றப்பட்ட மஹின்தோதய ஆசிரியர் இளைப்பாறுமிடத்திற்கு wide Ramp எனும் வேலைப்பொருள் மதிப்பீடு செய்யப்படுகையில் அடி மற்றும் அங்குலத்தில் குறிப்பிடப்பட்ட கூறுகளை மீட்டர் அளவில் கணிப்பிடப்படாததால் 20 பாடசாலைகளுக்கென மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 3,893,036 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பனாதரகம பயிற்சிப் பாடசாலையின் கணணிக் கட்டிடத்தின் கழிவறையை சுத்தமாக்கும் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக வைக்க வேண்டிய சுத்திகரிப்புக் கிடங்கு தொடர்பாக குறித்தவாறு வடமேல் மாகாண பொறியியயல் திணைக்களம் திட்டமிடாததால் ரூபா 59,856 க்கு மேலதிக வேலையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

## 6.9 தாமதாமாகிய செயற்திட்டம்

-------------------------------------------------

விளையாட்டு விழா மெய்வல்லுனர் போட்டி விசேட செயற்திட்டத்திற்காக 2013 ஆகஸ்ட் 21 அன்று நேரடி விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களத்தால் ரூபா 1,000,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் மூலம், 2013, 2014 ஆம் ஆண்டுகளில் புத்தளம் மற்றும் குருநாகலை மாவட்டங்களில் முறையே விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் 40 பேர், 50 பேர் என 5 மாத காலத் தொடர்ச்சியாகப் பயிற்றுவிப்பதற்கான பயிற்சிக்கான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அச் செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை.

**6.10 முறைப்படி சுவீகரிக்கப்படாத காணிகளிலும் சொத்துக்களிலும் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவத்தகம மாவட்ட மருத்துவ மனை மற்றும் சந்தலங்காவ மாவட்ட மருத்துவமனை அமைந்துள்ள காணிகளை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் சுவீகரித்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டு முடிவிலும் 9 ஆயுர்வேத மருத்துவ மனைகளும் 18 மத்திய மருந்தகங்களும் அமைந்துள்ள காணிகளைத் திணைக்களம் சுவீகரிக்கும் நடவடிக்கை முடிவடையாதிருந்தது. அம் மருத்துவ மனைகளிலும் மருந்தகங்களிலும் கட்டிடப் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றைக் மேற்கொள்வதற்கு அது தடையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சமூக நலனோம்பல் அமைச்சின் ரூபா 30 மில்லியன் பெறுமதியான 5 ஏக்கர், 3 றூட், 4 பர்ச்சஸ் காணியில் அட்டமுனை கிராம அபிவிருத்திப் பயிற்சி நிறுவனம் இயங்கியவாறு இருந்தபோதும் அச்சொத்துக்கள் சுவீகரிக்கப்படாதிருந்தன.

**6.11 பதவியணியினர் நிர்வாகம்**

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

**(அ) அமைச்சு, திணைக்களம், மற்றும் வலய அலுவலகப் பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 1,463 | 1,368 | 95 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 554 | 408 | 146 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 9,500 | 7,203 | 2,297 | - |
| ஆரம்ப மட்டம் | 4,535 | 4,126 | 409 | - |
| ஏனையவை | - | 101 | - | 101 |
| மொத்தம் | 16,052 | 13,206 | 2,947 | 101 |

**(ஆ) பாடசாலைப் பதவியணியினர் (வலய அலுவலகங்கள் நீங்கலாக)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| பாடசாலை அதிபர்கள் | 1,915 | 1,231 | 684 |
| ஆசிரியர்கள் | 26,383 | 22,890 | 3,493 |
| சிற்றூழியர் | 2,563 | 1,937 | 626 |
| ஏனையவை | 638 | 473 | 165 |
| மொத்தம் | 31,499 | 26,531 | 4,968 |

**(இ) அமைச்சரவை பதவியணியினர்**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பிரத்தியேக செயலாளர்கள் | 6 | 8 | - | 2 |
| ஒருங்கிணைப்புச் செயலாளர்கள் | 8 | 9 | - | 1 |
| ஊடகச் செயலாளர்கள் | 5 | 6 | - | 1 |
| பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்கள் | 6 | 5 | 1 | - |
| பிரத்தியேக உதவியாளர்கள் | 6 | 6 | - | - |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | 16 | 15 | 1 | - |
| சிற்றூழியர் | 12 | 16 | - | 4 |
| ஏனையவை (சாரதிகள்) | 24 | 187 | - | 163 |
| மொத்தம் | 83 | 252 | 02 | 171 |

**(ஈ) உள்ளூராட்சிப் பதவியணியினர் (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 28 | 20 | 8 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 47 | 19 | 28 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 1,227 | 1,289 | - | 62 |
| ஆரம்ப மட்டம் | 2,535 | 3,010 | - | 475 |
| ஏனையவை | - | 387 | - | 387 |
| மொத்தம் | 3,837 | 4,725 | 36 | 924 |

**(உ) நியதிச்சட்ட நிறுவனம் பதவியணியினர் (மாகாண சபை)**

| | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிட எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 20 | 10 | 10 | - |
| மூன்றாம் நிலை மட்டம் | 23 | 08 | 15 | - |
| இரண்டாம் நிலை மட்டம் | 174 | 148 | 26 | - |
| ஆரம்ப மட்டம் | 256 | 218 | 38 | - |
| ஏனையவை | - | 51 | - | 51 |
| மொத்தம் | 473 | 435 | 89 | 51 |

### 6.11.1 மாகாண சபையினது கல்வி மற்றும் சுகாதாரம் நீங்கலாக ஏனைய நிறுவனங்களது பதவியணியினர் தொடர்பான அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் அரச நிறுவனங்களில் பட்டதாரிகளைப் பணியிலமர்த்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வடமேல் மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தில் 36 வணிகப் பட்டதாரிகளும் 23 கலைப் பட்டதாரிகளும்

பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். திணைக்களத்தின் பிரதான பணியாகிய கூட்டுறவுச் சங்கக் கணக்காய்வில் கலைப் பட்டதாரிகள் ஈடுபடுத்தப்பட்டதும் தனது இலக்கை அடைவதற்காக அந்த உத்தியோகத்தர்களது பயிற்சிக்கு அதிக காலமும் கிரயமும் செலவழிக்கப்பட்டதும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பதிவேட்டின்படி 12 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள் இருக்க வேண்டுமாயினும், 2015 மே 31 அளவில் 7 உத்தியோகத்தர்கள் மாத்திரமே இருந்ததுடன் 5 உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருந்தபோதும் பொருத்தமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தன.

### 6.11.2 கல்வி சம்பந்தமான ஆசிரியர் மேலதிகம், பற்றாக்குறை என்பனவும் பணியிலமர்த்தலும்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாகாண கல்வித்திணைக்களத்திற்குச் சொந்தமான பாடசாலைகளில் பாடசாலை உதவியாளர்களை நியமிக்கும்போது தேவைகள் அல்லது மாணாக்கரது எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் அவர்கள் பணியிலமர்த்தப்பட்டிராததுடன் பாடசாலை மாணவர்களது விகிதத்திற்கமைய 1:161 மற்றும் 1:1398 எனும் விகிதத்தில் பணியிலமர்த்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான 337 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட பாடசாலை அமதிபர்களுக்குப் பதிலாக குறைந்த மட்டத்திலான தரப்படுத்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் பணியாற்றும் சந்தர்ப்பங்கள் நிலவியதுடன், 206 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்குப் பதிலாக அதி கூடிய தரத்திலான பாடசாலை அதிபர்கள் பணியாற்றும் சந்தர்ப்பங்களும் நிலவின.

(இ) மாகாணக் கல்வித் திணைக்களத்திற்குச் சொந்தமான 10 பாடசாலைகளில் இருக்க வேண்டிய தரப்படுத்தப்பட்ட பிரதிப் பாடசாலை அதிபர்களுக்குப் பதிலாக அதற்கும் கீழான தரத்தில் உள்ள தரப்படுத்தப்பட்ட பிரதிப் பாடசாலை அதிபர்கள் பணியாற்றுவதும் 150 வேறு பாடசாலைகளில் தரப்படுத்தப்பட்ட பிரதிப் பாடசாலை அதிபர்கள் இருக்க வேண்டியபோதும், அப் பாடசாலைகளில்

பிரதிப் பாடசாலை அதிபர்கள் இணைத்துக் கொள்ளப்படாதிருந்ததும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) திணைக்களத்திற்குச் சொந்தமான 147 பாடசாலைகளில் பதில் பாடசாலை அதிபர்கள் பணியாற்றுவதும் 112 பாடசாலைகளில் பாடசாலை அதிபர்கள் இல்லாதிருப்பதும் அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டு முடிவளவில் ஏனைய பதவியணியில் 257 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் ஆட்சேர்க்கப்பட்ட ஆரம்ப மட்டத்திலான 80 பதவிகளில் உள்ள ஊழியர்கள் தொடர்பாக முறையான அங்கீகாரம் பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதுமிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டு முடிவளவில் 4,968 பாடசாலைப் பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**6.11.3 சுகாதாரப் பிரிவு தொடர்பில் ஒவ்வொரு சேவையிலும் நிலவிய ஊழியர்களது மேலதிகமும் பற்றாக்குறையும்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவளவில் 1,577 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்காதிருந்தது.

(ஆ) ரீதீகம மாவட்ட மருத்துவமனையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு அதிகமாக மருத்துவர்கள் ஆறு பேர் இருக்கையில் 2014 பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மாதங்களில் முறையே 895, 1000 மற்றும் 930 மணித்தியாலங்களுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவாக ரூபா 1,061,980 வழங்கப்பட்டிருந்தது.

(இ) மாவத்தகம மாவட்ட மருத்துவ மனையில் 10 பதவிகளுக்குரிய 11 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவியதுடன் 7 பதவிகளுக்குரிய 25 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் இருந்தனர்.

(ஈ) நிக்கவரட்டிய ஆரம்ப மருத்துவ மனையில் 4 பதவிகளுக்குரிய 8 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவியதுடன் 2 பதவிகளில் 2 உத்தியோகத்தர்கள் மேலதிகமாகவும் இருந்தனர்.

(உ) மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் 5 மருந்தாளர்களுக்கான வெற்றிடம் நிலவியது. விசேட அறிவும் பயிற்சியும் இருக் வேண்டிய மருந்தாளர்கள் ஆற்ற வேண்டிய கடமையை சாதாரண தொழிலாளர்களைப் பயன்படுத்துதன் மூலம் ஆற்றிய சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 6.12 வங்கிக் கணக்கிணக்கம்

------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு திணைக்களத்தினதும் ஒரு பிரதேச செயலகத்திலும் 18 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 6 மாதங்களுக்கு மேற்பட்ட ரூபா 1,750,682 க்கான காசோலைகள் இருந்தன. அவை சம்பந்தமாக மாகாண நிதிசார் விதி 283 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 7 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 29,651 வரவும் 6 வங்கிக் கணக்குகளில் இனங்காணப்படாத ரூபா 252,088 செலவும் இருந்தன. இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

# 7. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

## 7.1 உள்ளகக் கணக்காய்வு

--------------------------------------

வடமேல் மாகாண சபையின் கீழ் உள்ள எந்த நிறுவனத்திலும் உள்ளகக் கூறு நிறுவப்படாதிருந்தது.

## 7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

----------------------------------------------------------------------------------

சமூக நலனோம்பல் அமைச்சு, ஆளுநர் அலுவலகம், சிறு கைத்தொழில் திணைக்களம், மாகாண வருவாய் திணைக்களம், மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் நியமிக்கப்படாதிருந்தன.

## 8. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக மாகாண சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடும் வருவாய் சேகரிப்பும்

(ஆ) சொத்துக்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவம்

(இ) ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதலும் கொடுப்பனவுகளும்

(ஈ) செயற்திட்ட அமுலாக்கல்

(உ) சட்டவாக்கம் மூலம் அமைக்கப்பட்ட நிறுவனங்களில் நிதிசார் நடவடிக்கைகளும் செயற்பாட்டு நிர்வாகமும்

(ஊ) வாகனப் பயன்பாடு